VOUCHER COPY

Registered at the G. P. O. as a Newspaper வாரப்பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் பிலவ பங்குனி 26 ஆம் நாள் துல்கஃதா 2 (8-4-62) ஞாயிற்றுக்கிழமை இதழ் 57

பட்டுப் பருத்திப்
பிடவைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்

டயரும்ஸ்

மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்

# ஆஸ்பத்திரியில் தீ

## சிசுக்களுடன் தாய்மார் சிதறி ஓடிய பரிதாபம்

### பிரசவ பெண்களுக்கு அதிர்ச்சியால் சுரம்

### ரூபாய் 30 ஆயிரம் நஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ரசாயன உபகரணப் பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த அறை சனிக்கிழமை திடீரென தீப் பற்றி எரிந்தது. இதனல் சுமார் 30 ஆயிரம் ரூபாய்பொருள் சேதமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முற்றிலும் சாம்பலானது. அருகிலுள்ள பிரசவவார்டுக்குத் தீ பரவிவிடாமல் தடுக்கப்பட்டதாயினும் அதிர்ச்சி காரணமாக அங்கிருந்த பல பிரசவ ஸ்திரீகள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நவீன உபகரணங்களுடன் கூடிய சத்திரசிகிச்சைத் தியேட்டர், அழுக்குத்துணி மூடைகள் சேமித்துவைக்கப்பட்டிருந்த வார்ட்டு என்பனவற்றுக்கு அண்மையில் இந்தத் தீவிபத்து நிகழ்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ரசாயனப் பொருட்கள் சேமித்துவைக்கப்பட்டிருந்ததான இந்த அறையில் குளிர்சாதன வசதிஎதுவும் செய்யப்படவில்லையெனத் தெரிகிறது. இந்த அறையை யாழ்ப்பாணம் சகோதரத்துவசங்கம், இந்த ஆஸ்பத்திரியை நிர்மாணித்த போது சமையலறையாக உபயோகித்தநூற்றூண்டு பழைய கட்டடமெனத் தெரிகிறது. எனவே உள்ளிருந்து உண்டானபலத்தவெடிச்சத்தம் ஒன்றையடுத்து தீப்பற்றி எரியத் தொடங்கியது. நிலைமை மோசமானதைக்கண்ட பிரசவ வார்ட்டிலிருந்த சுமார் 70 பெண்கள் தம் சிசுக்களுடன் வெளியேறி அங்குமிங்கும்சிதறியோடத் தொடங்கினர்.

இதற்கிடையில் வீதியால் போனவர்களும், ஆஸ்பத்திரி ஊழியர்களும்,வங்கிஉத்தியோகஸ்தர்களும் ஸ்தலத்துக்கு

(12-ம் பக்கம் பார்க்க)

## இடைத் தேர்தலில் சமஷ்டிக்கட்சி போட்டியிடும்

### சமசமாஜக்கட்சி விரைவில் முடிவுசெய்யும்

கொழும்பு, சனி

அண்மையில் நடைபெறவிருக்கும் மூதூர் தொகுதி இடைத்தேர்தலில் சமஷ்டிக் கட்சி தனது அபேட்சகரை போட்டிக்கு நிறுத்துமெனவும், வெலிமடை, அனுராதபுரம், மூதூர் ஆகிய மூன்று தொகுதிகளிலும், ஐக்கியதேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி ஆகியன போட்டியிட விருப்பதாகவும் தெரிகிறது.

1960-ம் ஆண்டு ஜுலைமாதம் 19-ம் திகதி ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றுடன் செய்துகொண்ட போட்டிதவிர்ப்பு ஒப்பந்தத்தை அண்மையில் நடைபெறவிருக்கும் வெலிமடை, மூதூர், அனுராதபுரம் இடைத்தேர்தல்களில் தொடர்ந்து கடைப்பிடிப்பிடிப்பதா அன்றி எதிர்த்துப் போட்டியிடுவதா என்பது பற்றி லங்கா சமசமாஜக்கட்சி மிகவிரைவில் முடிவுசெய்யுமெனத் தெரிகிறது.

இக்கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் போட்டிதவிர்ப்பு ஒப்பந்தமெதுவும் செய்யவேண்டாமென மத்திய கமிட்டியைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. வெலிமடையில் லங்கா சமசமாஜக் கட்சி தனது அபேட்சகரை நிறுத்துமென்றும், அனுராதபுரத்தில் நிறுத்தாமல் விடலாமெனவும் தெரிகிறது.

—

## தமிழரசு தலைமைக் காரியாலயம்

### நேற்றுமீண்டும் இயங்க ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக் காரியாலயம் கடந்த பலமாதங்களின் பின் நேற்று முதன் முதலாக சிலமணிநேரம் திறந்திருந்ததாகத் தெரிகிறது.

தமிழரசுக்கட்சி மீது விதிக்கப்பட்டிருந்த தடை காரணமாக இக்காரியாலயம் கடந்த சிலகாலமாக இயங்காதிருந்தது.

★ ஈழநாடு 8—4—62 ★

## எழுத்தாளர் பணி

எழுத்துக்கள் மூலம் உயர்ந்த கருத்துக்களையும், நற்சிந்தனைகளையும் பரப்பி தேச ஒற்றுமைக்குத் துணை செய்யுமாறு இந்திய எழுத்தாளர்களுக்கு உப ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் சமீபத்தில் யோசனை கூறியிருந்தார்.

காலத்துக்கேற்ற மாற்றங்களை இன்றைய உலகம் அடைந்து வருகின்றது. அதற்கேற்றவாறு உலக எழுத்தாளர்கள் அனைவரும் தங்கள் பணியைச் செய்ய வேண்டியவர்களாகின்றனர். உப ஜனாதிபதியும் உலகப் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளரேயாவார். அவர் கூறியிருப்பது போல எழுத்தாளர்களின் படைப்புக்களும் அவர்கள் எடுத்தாளும் கருத்துக்களும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு அமையுமாயின், அவை மக்களிடையே அறிவை வளர்ப்பதுடன் ஐக்கிய உணர்ச்சியையும் பெருக்குவதற்குப் பேருதவி புரிவதாகும்.

சமுகத்தைப் பாதிக்கும் தீமைகளை அகற்றி மக்களிடையே நற்பண்பையும் நல்லுறவையும் உருவாக்கக்கூடிய சக்தி இலக்கிய கர்த்தாக்களுக்கே உண்டு என்பதை உப ஜனாதிபதி நன்கு வலியுறுத்தியுள்ளார். பயத்தாலும்துவேஷத்தாலும் உலகமே இன்று பிளவுண்டு நிற்கின்றது. இவற்றின்றும் மக்களைக் காப்பாற்றி, சர்வதேச ஒற்றுமை ஏற்படச் செய்வதற்கு இலக்கியம் தலை சிறந்த வழியென்பதை எவரும் ஒப்புவர்.

மொழியால் மக்கள் வேறுபட்டிருந்தாலும் கருத்தால் அவர்களிடையே ஒற்றுமை உணர்ச்சி ஏற்படுவது சாத்தியமே.

இவ்வகையில் சிறந்த இலக்கியங்கள் பல்வேறு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு வருவது உலக ஒருமைப்பாட்டுக்கு வழி வகுப்பதாகும். ஒரு நாட்டு மக்களின் உயர்ந்த கருத்துக்களைப் பிறிதொரு நாட்டு மக்கள் அறியும் போது தாம் மொழியால் வேறுபட்டிருந்தாலும் கருத்தால் ஒருமித்தவர்கள் என்ற எண்ணம் உதயமாகும். உலகில் போட்டியும் பூசலும் ஒழிந்து அன்பும் பண்பும் வளரச் சிந்தனைச் செல்வர்களாகிய எழுத்தாளர்கள் ஆற்றவேண்டிய பணி மிக முக்கியமானதென்போம்.

# யாழ்ப்பாணத்திலிருந்து ராணுவம் வாபஸ்!

காங்கேசன்துறை, சனி

யாழ்ப்பாணப் பகுதிகளில் கடந்த ஒருவருட காலமாக இருந்து வந்த இராணுவ வீரர்களின் நடமாட்டம் அவசரகாலச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெகுவாகக் குறைந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் முகாமிட்டிருந்த இராணுவத்தினரில் பெரும்பான்மையினர் தமது முகாம்களைவிட்டுப் புறப்பட்டுவிட்டனர். சில இடங்களில் மட்டும் அவர்கள் தொடர்ந்தும் இருக்கப்போவதாகத் தெரிகிறது.

காங்கேசன் துறையில் இராணுவத்தினர் வாடி வீட்டில் தொடர்ந்து இருக்கின்றனர். ஆனையிறவில் முகாமிட்ட இராணுவத்தினர் வாபஸ்பெறப்பட்டார்கள். இப்போது அங்கு உணவுப்பகுதியையும், காட்டிலாகாவையும் சேர்ந்த தொண்டர்கள் கடமையாற்றுகின்றனர்.

கரையூரிலும், காங்கேசன் துறையிலும் இராணுவத்தினர் எப்போதும் இருக்கக்கூடிய முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிகிறது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தவிர்க்கவே இவர்கள் இங்கு நிறுத்தப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

புதுவருட மலிவு விற்பனை! 26 - 3 - 62 — 13 - 4 - 62

சாறி எம்போறியம் Saree Emporium

கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

## இன்று

இன்று சதுர்த்தி இரவு 6-43 வரை; பின்னர் பஞ்சமி. பகல் 1-21 வரை கார்த்திகை; பின்னர் ரோகிணி. சித்தயோகம். சத்தி கணபதி சதுர்த்தி விரதம். இராகுகாலம் 4-37 முதல் 6-07 வரை.

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்றுபடுபட்சிநாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளுதலாகாது.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

பிலவ ஆண்டு பங்குனி மாதம் 26-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை (8-4-62) முதல் சித்திரை மாதம் 1-ந் தேதி சனிக்கிழமை (14-4-62) வரை உள்ள பலன்கள்.

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் வரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பநலன்களுக்காக அலைச்சல், பணச்செலவு, சுபகருமகொண்டாட்டம், வர்த்தக சிறப்பு, உத்தியோகத்தில் மந்த நிலைமை, சிக்கல்கள், கமத்தொழில் பொருட்செலவு, கல்விக்காக பணச்செலவு, பெண்களுக்கு குடும்பமகிழ்ச்சி, குடும்பநலம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 10, 11 சுபதினங்களாகும்.

★

### இடப இராசி

(கார்த்திகை பின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில வெளியூர்ப்பிரயாண அலைச்சல், பணச்செலவு, வியாபார இலாபம், பணவரவு, உத்தியோகச் சிறப்பு, புதிய வேலைகள் சித்தியாதல், கமத்தொழில் சொத்துச்சேர்க்கை, கல்வி இடையூறு, பெண்களுக்கு செலவு அதிகரிப்பு, தனதானிய விருத்தி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 8, 9, 12, 13 சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகாரோக்கியக் குறைவு, உட்டணரோகம், வர்த்தகத்தில் மத்திம பலிதம், கௌரவவிருத்தி, உத்தியோகத்தருக்கு தொழில் நலம், மேலோர் ஆதரவு, கமத்தொழில் சுறுசுறுப்பு, லாபம், மாணவருக்கு பரீட்சைவெற்றி, பெண்களுக்கு இனசன பந்துக்கள் உதவி, விவாகப்பேறு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 10, 11 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் 4-ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிதுருவழிஆதரவு, பிடிவாதத்தால் கஷ்டங்கள் ஏற்படுதலும் நீக்கமும், வர்த்தகத்தில் ஊக்கமும் இலாபமும், உத்தியோகத்தில் கடும் உழைப்பு, கமத்தொழிலில் சகோதரர் கஷ்டம், பகை, மாணவருக்கு பரீட்சைவெற்றி, பெண்களுக்கு குடும்பசந்தோஷம், சந்ததிநலம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 8, 12, 13 சுபநாட்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில்விருத்தி, குடும்பசுகக்குறைவு, வைத்தியச் செலவு, வர்த்தக லாபம், தொழில் சம்பலிதம், உத்தியோக கஷ்டம், மேலோர் பகை, கமத்தொழிலில் நட்டம், மாணவர் உடல் நலக்கேடு, வித்தைத்தடை, பெண்களுக்கு குடும்பஒற்றுமை, நலங்கள் பெருகுதல் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 8, 9, 11 சுபநாட்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிரயாணசுகம், குடும்பஅமைதி. தேகநலம், வர்த்தக தொழிலில் உற்சாகம், உத்தியோகத்தில் பகைவரால் இடர், கமத்தொழிலாளருக்கு பெண்களால் தொல்லை, குடும்ப பணச்செலவு, மாணவருக்கு வித்தைத்தடை, சோம்பல், பெண்களுக்கு குடும்பசௌக்கியம், உடல்நலம் ஆகியன காணப்படுகின்றன். இவர்களுக்கு ஏப்ரல் 10, 11, 13 சுபதினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் உடல்நலம், தொழில் விருத்தி, பணக்கஷ்டம் நீங்குதல்,மகிழ்ச்சி, வர்த்தகத்தில் மத்திமமானஆதாயம், உத்தியோக இடமாற்றம்' சிறப்பு, கமத்தொழில் ஊக்கம்' மாணவருக்கு உடல்நலக்கேடு, வித்தைத்தடை, பெண்களுக்கு அலைச்சல், பணமுடை, கணவருக்கு கஷ்டங்கள் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 12, 13 சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம்பாதம், அனுஷம், கேட்டை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் வெளியூர்ப் பிரயாணங்கள், பிறருக்காகச்செலவுகள், நிம்மதியற்ற உழைப்பு, வர்த்தகத்தில் தொழிற்சிறப்பு, ஊதியம் மத்திமம், உத்தியோகத்தில் நம்பிஏமாறுதல், மத்திம பலிதம், கமத்தொழிலாளருக்கு அடிக்கடி பிரயாணமும் பணச்செலவும் அதனால் பயிர்த்தொழில் கேடுறுதல், மாணவருக்கு மனத்தளர்ச்சி, கல்வித்தடை, பெண்களுக்கு உடல் நலக்கேடு, பணச்செலவு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 8, 9 சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் வெளியூர்ப்பிரயாணங்கள், சந்ததிகளுக்காகப் பணச்செலவு, பிரமுகர்கள் சந்திப்பு, மதிப்பு, வர்த்தகத்தில் பொருள்வரவு, மத்திம இலாபம், உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி பிரயாணமும் எதிரிகளால் இடர்களும் கடுமையான உழைப்பும்,மாணவருக்கு பரீட்சைகளில் நன்மை, கல்வியிற் சுறுசுறுப்பு, பயிர்த்தொழிலில் கால்நடைகள் செலவு அதிகரிப்பு, ஊக்கத்தடை, பெண்களுக்கு குடும்பசந்தோஷம், அவசர செலவுகள் ஆதியன காணப்படுகின்றன. ஏப்ரல் 8, 9, 11 சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கடும் உழைப்பு, பலிதக்குறைவு, பிரயாண கஷ்டம், வர்த்தக ஆதாயம், தொழில் விருத்தி, உத்தியோகசிறப்பு, மேலோர் பாராட்டு, புதிய முயற்சி வெற்றி, கமத்தொழிலாளருக்கு குடும்பஒற்றுமை, பயிர்த்தொழில் ஊக்கம், மாணவருக்கு தொழிற்கல்வி வெற்றி, பரீட்சைச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, சகோதர உதவி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 10, 11, 13 சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சந்ததிநன்மை, சுபகருமங்கள், வண்டிவாகனதிகள் சுகம், வியாபார நலம், தொழில்விருத்தி, உத்தியோகத்தில் கஷ்டம், உழைப்புக் கஷ்டம்,மதிப்புக்குறைதல்,கமத்தொழில் தளர்ச்சி, பணச்செலவு, மாணவருக்கு கல்வியில் உற்சாகக்குறைவு, பணமுடை, பெண்களுக்கு தனதானிய விருத்தி, குழந்தைகளுக்கு நலம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 12, 13 சுபதினங்களாகும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி 4-ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனநிம்மதி, குடும்ப சௌக்கியம், சாதகநிலைமை, வர்த்தகத்தில் தொழிற்சிறப்பு, இலாபம், பணவரவு, உத்தியோகத்தில் கடும் உழைப்பு, மேலோர்பகை,கமத்தொழிலில் பொருள்நட்டம், பயிர்ப்பலிதமின்மை, மாணவருக்கு வித்தைச்சிறப்பு, கல்வியிலூக்கம், பரீட்சைவெற்றி, பெண்களுக்கு பெரியோர் பாராட்டு, குடும்ப சிறப்பு, தனதானியசேர்க்கை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 8, 9 சுபநாட்களாகும்.

## சுக்கிரன் கிரகத்தில் உயிர் இனம் இல்லை

சுக்கிர கிரகத்தில் வெப்பநிலை 300 பாகை சென்டி கிரேடு அளவுக்கு இருப்பதாக ரஷ்ய வானிலி ஆராய்ச்சியாளர் வாசிலே பெசெங்கோவ் தெரிவித்துள்ளார்.

இந்த அளவுக்கு வெப்பம் இருப்பதாலும் சுக்கிரனின் காற்று மண்டலத்தில் 75 வீதம் கரியமிலவாயு இருப்பதாலும் அங்கு உயிரினங்கள் வாழ முடியாமலிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சுக்கிரனின் வெப்பநிலை வானொலி—வானாய்வுக் கருவிகளால் பதிவுசெய்யப்பட்டதாகவும் அவர் கூறினர்.




நாளுக்கு
நாள்
கடின பாவனைக்கு
நிகரற்று
விளங்குவது.

கனபோ
பொப்ளின்

ஆமாம், தானாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள் : ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம் : ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

நாமகமிருக்கும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX

சிலம்பின் சிறப்பு: 6

# கற்புக் கடம் பூண்ட பொற்புடை நங்கை

— வித்துவான் பொன். முத்துக்குமாரன் —

"மகளிர் எவரும் தம் கணவர் அறிவிலும் அழகிலும் ஆற்றலிலும் மிக்கோராய் இருத்தலையே விரும்புவர். அவ்விருப்பம் துணையாக அவர்களது அன்பு நாளுக்குநாள் பிறைமதிபோல வளர்ந்து நிறைவுறும்."

ஆடவரை ஆண்மையுடையரென்றும் ஆளும் தன்மையுடையரென்றும், பெண்களை மெல்லியராரென்றும் விரும்பத்தக்கார் என்றும் மடவார் பேதையரென்றும் கூறுவது புலவோர் வழக்கு. இதனால் ஆண்கள் வலியரென்றும் உயர்ந்தோர் என்றும், பெண்கள் மெல்லியர் என்றும் தாழ்ந்தோர் என்றும் கொள்ளுதல் பொருந்தாது. இருதிறத்தாரும் வேறுவேறுவகையால் உயர்ந்தவரே. அவ்வாறே துறவிகள் உயர்ந்தவரென்றும் இல்வாழ்வார் இழிந்தவரென்றும் கூறுதல் பொருந்தாது. வனத்திலே வாழ்ந்து உணவைச் சுருக்கி, புலன்களையடக்கி, ஒருமையுடன் இறைவனை நினைந்து தவஞ்செய்யும் முனிவர்கள் எத்துணைப்பெரியரோ அத்துணை இல்லிலிருந்து அன்பைப் பெருக்கி அறவழியில் வாழும் மங்கையரும் மாணப் பெரியரேயாவர். "வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும், நுங்குவ அருந்துவ நீக்கி நோற்பவர் எங்குளர்? குலத்தில் வந்து இல்லில் மாண்புடை நங்கையர் மனத்தவம் நவிலற்பாலதோ?" என அநுமன் கூறியது ஈண்டு நினைக்கத்தக்கது. மெல்லிய இயல்பினையுடையராய பெண்கள் தம் கணவரிடத்து வைத்த தலையாய அன்பினால் தவத்தோரினும் மேலாம் நிலையையும் வலிமையையும் எய்துகின்றனர். அந்நங்கையர் பிறரால் செய்தற்கரிய செயலைச் செய்யவும் வல்லராகின்றனர். துறவியர்கள் தம்மைத் துன்பஞ் சுடச்சுட இறைவனிடத்தில் வைத்த அன்பிற் சிறிதும் பிறழாது உறுதியாய் நின்று உயர்வடைகின்றனர். அதுபோலக் கற்புடைய மங்கையரும் துன்பஞ் சுடச்சுடத் தம் கணவரிடத்தில் வைத்த அன்பில் அணுவளவும் மாறுபடாது அறமேபுரிகின்றனர். அவ்வாறு அப்பெண்ணினல்லார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதனால் வானுறையும் தெய்வத்துள் வைத்து மதிக்கப்படுகின்றனர். சிலம்புச் செல்வியாகிய கண்ணகி அவ்வாறு வாழ்ந்து தெய்வமானவளாவள்.

## கண்ணகியின் தூய அன்பு

மகளிர் எவரும் தம் கணவர் அறிவிலும் அழகிலும் ஆற்றலிலும் மிக்கோராய் இருத்தலையே விரும்புவர். அவ்விருப்பம் துணையாக அவர்களது அன்பு நாளுக்குநாள் பிறைமதிபோல வளர்ந்து நிறைவுறும் தம் கணவர் மதுவையோ சூதினையோ விரும்பின் அது அம்மங்கையர்க்குத் துன்பத்தையே தரும். தன் கணவன் மதுவருந்துதல் முதலிய தீயசெய்கைகளை விடாதுசெய்து உறவினராலும் பிறராலும் வெறுத்து ஒதுக்கப்படினும் நற்குணம் வாய்ந்த மனையாள் அவனை வெறுக்காது அன்பு செய்வாள். அவ்வாறு தன் கணவனிடத்துள்ள குற்றங்களெல்லாவற்றையும் குணமாகக்கொண்டு நேசிக்கும் உயர்ந்த பண்பு வாய்க்கப்பெற்ற உத்தமியும் தன் கணவன் மற்றொரு பெண்ணில் மனம் வைததுள்ளான் என்பதைக் கனவிலும் விரும்பாள். பிற பெண்ணிடத்தில் உறவுடையானையும் குறைகாணாது, அவனைத் தன் உள்ளக் கோயிலில் எழுந்தருளிய உயிர் தெய்வமாகப் பூசித்து அன்பு செய்தல் செயற்கு அரிய செயல் மட்டுமன்று; நினைத்தற்கரியதுமாகும். கம்பர் காட்டிய கற்பினுக்கு அணியான சீதை இராமன் பிரிவும் அரக்கியரின் நெருக்குதலும் வருந்தவருந்த, அருந்தவம் செய்வார் போல இராமன் நாமமே தாரகமாய் அவன் மேல் தான் வைத்த அன்பே உயிராய் அருஞ்சிறையில் இருந்தாள். தீயவர் கையில் அகப்படினும் தன் நாயகனையன்றிப் பிறரை உள்ளத்தாலும் தீண்டாத உத்தமியரின் வாழ்வுக்குதாரணமாகச் சீதையின் சிறைவாழ்வு அமைந்துள்ளது. இளங்கோவடிகள் சிறப்பித்துப் புனைந்த பெண்ணணங்கார் கண்ணகி, மங்கையர் யாரும் பொறுக்கலாற்றாத தீய ஒழுக்கத்தை மேற்கொண்ட தன் நாயகனைத் தூய்மையான அன்போடு தொழுது அவன் குறிப்பின்வழி ஒழுகிய பெருஞ் சிறப்புடையளாயினள்.

## பெரியதொருகவலை

ஒரு பயனையும் கருதாது செலுத்தப்படும் அன்பே தலையாயது. தலைவன் நேசிக்காவிடினும் தம் நேயம் குன்றாதிருத்தலை உயர்ந்தாரிடத்தில் காணலாம். காரைக்காலம்மையார் இறைவனிடத்தில் வைத்த அன்பு அத்தகையதே. "இடர்

## இலக்கியச் சோலை

களை யாரேனும் எமக்கிரங்காரேனும் படரும்நெறிபணியாரேனும் - சுடருருவில், என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு அன்பறாது என்னெஞ்சு அவர்க்கு" என்ற அவரது திருவாக்கில் அவரது அன்பின் தன்மை புலப்படுகின்றது. "என்னெஞ்சு அவர்க்கு" என்ற அம்மையார் அன்பு போலக் கண்ணகியும் தன் நெஞ்சினைக் கோவலனுக்கே உரிமையாக்கிய தன்மையள். அவள் நெஞ்சம் கோவலனை நேசித்தலையன்றி வேறு அறியாது. கோவலனைத் தனது ஆடல், பாடல், ஊடல், கூடல் ஆகியவற்றால் மாதவி மகிழ்விப்ப, அவன் கண்ணகியையே மறந்து வாழ்கின்றான். கண்ணகியின் அணிகலன்களும் ஒன்றொன்றாக மறைகின்றன. எண்ணிறிய செல்வமும் வெயில் முன்கிடந்த வெண்ணெய் போலக்கரைந்து தீர்கின்றது. அந்நிலையிலும் கண்ணகியின் மனம் கோவலனை வெறுக்கவில்லை. கோவலனோடு கூடிமகிழும் மாதவிக்குக் கிடைத்த இன்பவாழ்வும், கோவலனின் தாய் தந்தையரும் தன் தாய் தந்தையரும் அளித்த குன்றமனைய செல்வக் குவியலும் தனக்கெய்தாமை பற்றியோ தான் அவற்றை இழந்தமை பற்றியோ கண்ணகி எண்ணிலளல்லள். அவையேயன்றிக் கோவலன் தன்பால் அன்பு குறைந்தான் என்றும் கண்ணகி கருதினாளல்லள். தன் கணவனது அன்பினைத்தானும் எதிர்பாராது அவனுக்குத் தன் அன்பினைப் பெருக்கிமகிழ்வதிலேயே கண்ணகி கருத்தாயிருந்தாள். எனவே தீயவனாய்த் திரிந்த கோவலனைத் தெய்வமாகக் கருதி அன்பு செய்த அவளுக்கு சிறிதேனும் மனக்கவலை இல்லை யென்பதில்லை. பெரியதோர் கவலை அவள் மனத்தைப் பிடித்திருந்தது. தன் தெய்வமான கணவனைப் பேணிப்பணிசெய்யவும், அவனோடு கூடி அறம்பல புரியவும் ஆவல் சொண்டிருந்தாள். அந்தத் தவங்களை ஆற்றத் தன்கணவன் அருகில் இல்லாதது அவளது மனத்தைக் கணந்தோறும் வருத்தியது. அவ்வருத்தத்தால் புலம்புதல், பிறர் தன்னை ஆற்றத் தக்கவாறு பெருந்துயருறுதல் என்பன சிறிதுமின்றி அடங்கிவாழ்ந்தாள். கோவலனின் தாய்தந்தையர் அவன் கண்ணகியைப் பிரிந்துவாழுதலைக் காணும்தோறும் தம் மைந்தன் செயல் நினைந்துவருந்துவர். கண்ணகி அவர்களைக் காணும் போதெல்லாம் தன் கவலையை மறைதது, தன் புன்முறுவல் மூலம் அவர்களது துயரத்தையும் ஒருவாறு துடைப்பாள். கணவன் அறம், பொருள், இன்பம் காரணமாகப் பிரிந்த காலத்தில் ஆற்றியிருத்தல் முல்லை எனப்படும். சங்க இலக்கியங்களில் கூறப்படும் தலைவன் அறம் முதலியன காரணமாகப் பிரிந்திருக்கும் காலம் ஒரு குறித்த அளவினதாயே அமையும். எல்லைகடந்து பிரிந்திருப்பதாக இலக்கியஞ் செய்தல் புலவர் வழக்கில் இல்லை. கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியோடு வாழ்ந்தகாலம் தொல்காப்பியத்திற் கூறப்பட்டகால எல்லையைக் கடந்தது. ஓராண்டு ஈராண்டன்றி பல்லாண்டுகள் மனையையே மறந்திருந்த கோவலனிடத்தில் மாசில்லாத அன்பு பூண்டு அவ்வன்புதுணையாக ஆற்றியிருந்த கண்ணகியின் பண்பு காவியப் பொருளுக்கு உயிராய் விளங்குகின்றது.

## கணவனே தெய்வம்

கோவலன் பிரிந்தமையால் கண்ணகியின் உள்ளத்தில் மூளாத்தீப்போல் அடங்கிக் கிடந்த துயரத்தை முகக்குறிப்பாலறிந்த தேவந்தி என்பாள் அவளது துயரைப் போக்கவும் அவளுக்கு நல்வாழ்வுகூட்டவும் ஆசைப்பட்டு ஒருநாள் அவளை அணுகி, ஒன்று கூற முற்படுகின்றாள். காவிரி கடலோடு கலக்கும் இடத்திற்கயலிலே நெய்தலங்கானல் என ஓரிடம் உண்டு. அங்கே சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் பெயருடைய இரு குளங்கள் உள்ளன. கணவனைப் பிரிந்தோர் அவ்விரு குளத்திலும் மூழ்கி, அயலிலேயுள்ள காமவேள் கோயிலில் சென்று வணங்குவராயின் பிரிந்த கணவரை மீட்டும் கூடப்பெற்று இம்மையில் இன்பம் நிறைந்து வாழ்வர். மறுமையிலும் பிரியாது சுவர்க்கத்தில் இன்பந்துய்ப்பர். இச்செய்தியைத் தேவந்தி கண்ணகிக் குரைத்தபோது அவள் அதனை ஒருபொருளாக மதிக்கவில்லை. கணவனையன்றிப் பிற தெய்வத்தைக் கனவிலும் கருதாத கற்புக்கடம் பூண்ட கண்ணகி, "இது நமக்குப் பெருமைதருவதன்று" எனச் சுருக்கமாகக் கூறி அக் கருத்தைக் கைவிட்டாள். 'தெய்வ மிகழேல்' என்றதனால் தெய்வத்தை வணங்காமை ஒரு குற்றமாகும். தெய்வத்தை நம்பாதவர்களையும் தெய்வத்தை வணங்காதவர்களையும் அறிவுடைப் பெருமக்கள் மதிப்பதில்லை. தெய்வம் இல்லையென்பவன் பேய்க்குச்சமானமானவன் எனத் திருக்குறள் கூறுகின்றது. அவ்வாறு ஆனையிடும் திருக்குறள் தெய்வந்தொழாது கணவனைத்தொழுதெழுபவளைத் தெய்வத்துக்குச் சமமாகச் செப்புகின்றது. கண்ணகி, தெய்வமில்லை என்று அதனைத் தொழாதவளல்லள். கண்ணகி தெய்வத்தைக் கணவனிடத்திற்கண்டுதொழுபவள் தெய்வத்தை ஒரு வடிவில், ஒரு பெயரில் வைத்து அன்பு செய்யும் உயர்ந்த மெய்யடியார்கள் பிறவடிவில், பிறபெயரில் அதனைக் காண்பதில்லை. அதுபோல, கணவனையே தெய்வமாக வணங்கும் கற்புடைமகளிர் பிறதெய்வத்தைப் பேணி அன்பு செய்வதில்லை. ஆகவேதான், தன் கணவனை மீளப் பெறும் பொருட்டாயினும் கண்ணகி பிறதெய்வத்தை வணங்க நினையாதொழிந்தாள்

---

# கலைமிளிரும் மாலை

— "ஆடலிறை" —

பாய்ந்தோடுந் நீரோடை பலவுந் தோன்றும்
    பலவண்ணக் கூட்டுக்கள் கலந்து தோன்றும்
சாய்ந்தோடுங் களிற்றுருவம் மகிழத் தோன்றும்
    சந்நிதியில் நாம்வணங்கு மிறைவன் தோன்றும்
பேய்போல விரைந்தோடும் மேகக் கூட்டம்
    பொருதுபல யானையெனத் தோன்றுங் காட்சி
காய்வின்றி யுவப்பின்றி இயல்பாய்க் காட்டும்
    கலைமிளிரும் மாலையது காண வாரீர்!

பகலெல்லாம் மென்னில வாடை கட்டி
    பவனிவரும் கோலஞ்செய் வான மங்கை
தகவுடைய மாலையிலே தோன்றுங் கோலம்
    சகத்திலுளோ ரியம்புதற்கு மெளிதே யாமோ
முகமினுக்கிக் காதலனைக் காண வேகும்
    மங்கையர்போற் சந்திரனுந் தலைவற் காண
சிகப்பினிலே யோராடை யுடுத்தி நிற்பாள்
    சிறந்தவொரு பொன்னுடை போர்த்தி நிற்பாள்

கறுப்பினிலே மறைந்துநின்று தருவா ளச்சம்
    கண்மூடித் திறப்பதற்குட் காட்சி மாறும்
பெறலரிய தவஞ்செய்தும் மீண்ட கோலம்
    பெற்றிடுத லிவ்வுலகி லென்று மில்லை
மறுவின்றி யுருவின்றி யமைதி தோன்றும்
    மறுகணத்தி லுதிரவெள்ளம் பாய்ந்து செல்லும்
இறும்பூது தருங்காட்சி யியற்றுங் கொத்தன்
    இயற்கையைப் போலிவ்வுலகி லுண்டோ சொல்வீர்!

---

# யந்திரங்களை இயக்க எருவாயு சக்தி

மாட்டுச்சாணி, மலம், உலர்ந்த இலைகள் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் 'மெதேன்' வாயுவைக்கொண்டு 5 குதிரைச் சக்தியுள்ள யந்திரத்தை இயக்கலாம்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் ரசாயனத்துறை இன்று இதனைச் செய்து காட்டியது. உமி நீக்கும் யந்திரங்கள், மாவரைக்கும் ஆலை, எண்ணெய் பிழியும் சிறு யந்திரங்கள் ஆகிய தொழில்களுக்கு இந்த 'மெதேன்' வாயு யந்திரங்களைப் பயன் படுத்தலாம். இதுவரை விளக்கு எரிப்பதற்கும் வீட்டுச் சமையல் வேலைகளுக்கும் வாயு தயாரிப்பதற்கே சாணி வாயு யந்திரம் பயன்படுத்தப் பட்டுவந்தது.

ஒரு யந்திரம் நிறுவ 300 ருபாயே செலவாகும். மூன்றாவது திட்டமுடிவில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 20,000 சாணி வாயு யந்திரங்கள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**"இலங்கை அரசியல் சுதந்திரம் அடைந்த பெரும் நாடகத்தில் பங்குபற்றிக் களித்தவர்களில் நானும் ஒருவன். ஒலிவர் குணத்திலக்காவின் உழைப்புக்கள் எல்லாம் திரை மறைவில்தான் இருந்தன. சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதில் அவர் எடுத்துக் கொண்ட பங்கு பெரிது"**

# இலங்கையின் சுதந்திர நாடகம்

## மூவர் மந்திராலோசனை: கவர்னர் பகட்டுப் பேச்சு: உலக மகாயுத்தம்: திருமலை குண்டுவீச்சு: தமிழ்க் காங்கிரஸ்: சிங்கள மகாசபை: தேர்தலிற்போட்டி: சிறுபான்மையினருக்கு வாக்குப்பலம்: சோல்பரித்திட்டம்: இரகசியத் தூதர்

— பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் —

## ஈழப்பாட்டனின் கடிதங்கள்: 9

"ஹறின் வாசா",
லிங்கம் தோட்டம்,
வவனியா 25-3-1962

எனது அருமையான ஹறின்

இந்தக் கடிதத்தில் ஒலிவர் குணத்திலக்கா நானறிய அரசியலில் ஈடுபாடு கொண்டுழைத்த விபரங்கள் சிலவற்றைஎழுதப்போகிறேன்.

ஒலிவர் ஓடிற்றர் ஜெனரலாக நியமனம் பெற்றுவிட்டார். ஏற்கனவே, டொனமூர் அரசியல் திட்டம் பிரகடனம் செய்யப்பட்டு நடைமுறையிலிருந்து வந்தது. அதன்படி மந்திரிகள் குழுவிலே, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் தொகை அதிகரிக்கப்பட்டது. அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து, அநேகமான தங்கள் நல்ல நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்குரிய அந்தஸ்துப் பெற்றிருந்தனர். தங்கள் குறைமுறைகளை எடுத்துக்கூறி உலோப குணம் நிறைந்த ஆங்கிலேய குடியேற்ற நாட்டு அரசாங்கத்திடமிருந்து தத்தம் உரிமைகளை அவரவர் வல்லமைக்கேற்ப வாதாடிப் பெற்றுக்கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு அதிகாரம் இருந்தது.

அந்த நாட்களிலே நிதிக் காரியதரிசி நியமனம் காலியாயிற்று. ஒலிவர் குணத்திலக்கா அந்த உத்தியோகத்திற்கு வர அந்தஸ்தும், தகுதியும் உடையவராகையால் டி. எஸ். சேனநாயக்காவின் ஆதரவோடு அதைப்பெற முயற்சித்தார். ஐரோப்பியரல்லாத காரணத்தால் அவருக்கு அந்த உத்தியோகம் கிடைப்பது அரிது என்றே அனைவரும் கருதினர். "மூன்று தலைகளும்" (ஒலிவர் நான், டி. எஸ்.) ஒன்றுகூடி ஆலோசித்தோம். சென்ற காலத்தில் ஒலிவர் பிரித்தானிய அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் செய்த சேவையை கவர்னர் முகத்திற்குமுன் பாராட்டுவார் என்பது எனக்கு விளங்கும். ஆனால் இந்தப் பாராட்டுரைகள் எல்லாம் வெறும் முகஸ்துதிகளாகுமேயன்றி, மனப்பூர்வமாக அவரின் விண்ணபத்தை சீமையில் குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்குச் சிபார்சு செய்து அந்த உத்தியோகத்தைப் பெற்றுக் கொடுக்க கவர்னர் உதவுவாரோ என்னும் அசாத்தியம் எங்கள் மனதில் குடிகொண்டிருந்தது. எனக்கொரு யோசனை உதித்தது. "ஒலிவர் நேரில் சென்று கவர்னரைச் சந்தித்து சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் முறைப்படி விளக்கவேண்டும். இதற்கு முன் கவர்னரைச் சந்திக்கும் ஒரு வசதியான தேதி நேர நியமன ஒழுங்கைச் செய்ய வேண்டும். தன்னைப்பற்றிய தராதர தகுதி விபர விளக்கப் பத்திரமொன்றை முன்னடியே தயார் செய்து தன் கோட் பாக்கெட்டில் வைத்திருக்க வேண்டும். சந்திப்பின் முடிவில் விளக்கப்பத்திரத்தை கவர்னரிடம் சமர்ப்பிக்கவேண்டும். அந்தப் பத்திரத்தில் சந்தேக விபரீதம் சற்றுமில்லாது ஆதியோடந்தமாய் ஒலிவர் பிரித்தானிய அரசாங்கத்திற்கு ஆற்றிவந்த சேவைகள் அனைத்தையும் தெள்ளத்தெளிவாய் எடுத்துக் கூறவேண்டும். அந்த உத்தியோகத்திலமர்ந்து சேவைசெய்ய ஒலிவர் தனக்குள்ள உரிமையையும், தகைமைகளையும் உலவியாது வெளிப்படுத்த வேண்டும்." தராதர தகுதி விபர விளக்கப் பத்திரம் வெகுகாலமாகத் தயாரிக்கப்பட்டது. பலமுறை திருப்பி வாசித்துப் பிழைசரி பார்க்கப்பட்டது. இவையெல்லாம் நடந்தது எனது வீட்டிலேயேதான்.

### கவர்னர் சந்திப்பு

சந்திப்பு ஒழுங்கானது. ஒலிவரும் சென்றார். எதிர்பார்த்தபடி கவர்னர் பகட்டுப் பேச்சுக்களிலேயே ஆரம்பித்துவிட்டார். சம்பாஷணை முடிவில் எங்களால் முறைப்படி தயாரிக்கப்பட்ட பத்திரம் கவர்னரிடம் கையளிக்கப்பட்டது. எனது ஞாபகத்தின்படி கவர்னர் அந்தப் பத்திரத்தைப் படிக்கத் தொடங்கியதும் முகம் பேதலமைகொண்டு வெள்ளை முகத்தில் வெட்க நரம்புகளோடி முகபாவமும், நிறமும் மாறிமாறிக் காணப்பட்டதாக ஒலிவர் என்னிடம் பின்னர் தெரிவித்தார். தன்னுடைய 'பகட்டுப் பல்லவிகள்' எல்லாம் ஒலிவர் சமர்ப்பித்த் விபர விளக்கப்பத்திரத்தில் அப்படியே அமைந்திருந்தமைதான் கவர்னரின் மனவெருட்சிக்குக் காரணம் ஆகும். இது நிகழ்ந்து அதிக வருடங்கள் ஆகவில்லை. ஏற்கனவே ஒலிவர் குணத்திலக்காவை இந்த நியமனத்திற்கு ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்துவிட்டனர். ஆனால் ஈற்றில் அந்தப்பதவி அவருக்கேகிடைத்தது. ஒலிவர் குணத்திலக்கா நிதிக் காரியதரிசியாக நியமனம் பெற்றார். அவருக்குரியது அவருக்கே கிடைத்தது!

### இரண்டாவது யுத்தம்

இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமானது. பிரிட்டிஷ்காரர் மலாயாவில் படுதோல்வியுற்று நிலைகலங்கினர். அந்நாட்களில் சேர். ஜியோபெரி லெயிட்டன், இந்தியா–இலங்கை–தூரகிழக்குப் பிரதேசங்களிலுள்ள பிரித்தானிய சைனியங்களின் பிரதமசேனாதிபதியாக இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கை, தேசிய நெருக்கடிப் பாதுகாப்புச் சட்ட ("டோரு"—டிபென்ஸ் ஒவ் த றெல்ம் அக்ட்) நிர்வாகத்திற்குட்பட்டிருந்த காலம். உள்நாட்டு அரசியல் விவகாரப் பாதுகாப்பு அதிகாரியாக ஒலிவர் குணத்திலக்கா நியமனம் பெற்றார். அத்துடன் இலங்கை யுத்தக் கவுன்சிலிலும் ஒரு அங்கத்தவராகப் பொறுப்பேற்றார். அந்தக் கவுன்சிலில் மந்திரிகள் குழுவிலிருந்து (போட் ஒவ் மினிஸ்டேர்ஸ்) தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருள் டி.எஸ்.சேனநாயக்கா, லயனல் (பின்னர் பிரதமர்) கொத்தலாவல ஆகியோரும் அங்கம் வகித்தனர்; வேறு முக்கியஸ்தர்களும் இருந்தார்கள். யப்பானியர்கள் திருக்கோணமலையைத்தாக்கி அட்டகாசம் செய்தனர். கொழும்பிலும் குண்டு வீசப்பட்டது. கொழும்பின் சுற்றுப்புறங்களும் தாக்கப்பட்டன. ஒலிவர் இந்த வேளையில் செய்த சாமர்த்திய செயல்களினாலும், மெச்சத்தக்க சேவைகளினாலும் அவரின் பதவி மிகவும் மதிப்பும், முக்கியத்துவமும் அடைந்தது. அந்த நாட்களில் அவர் நாட்டுக்கும், மக்களுக்கும் ஆற்றிய அரும்பெரும் சேவைகளை முறைப்படி அறிந்தவர்கள் சிலரினும் சிலரே ஆவர். எங்களது நாட்டின் சரித்திரத்திலேயே அதிக ஆபத்தான ஒரு வேளையில் அவர் ஆற்றிய உதவியும், உயர்ந்த தொண்டும் ஒவ்வொருவராலும் என்றும் ஞாபகத்தில் வைத்திருக்கப் படவேண்டும்.

### அப்புக்காத்துப் பிழைப்பு

அந்த நாட்களிலேதான் ஐவர் ஜென்னிங்ஸ் இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரியின் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார். கல்வி மந்திரியின் நிர்வாகக்குழு அவரைத் தெரிந்தெடுத்து அடுத்த 24 (இருபத்துநாலு) மணித்தியாலங்களுக்குள் நான் எனது சர்வகலாசாலைப் பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வெடுத்துக்கொள்ளும் பத்திரங்களைச் சமர்ப்பித்தேன். பரிஸ்டர் ஆதலின் உடனே, அப்புக்காத்துப் பிழைப்பில் இறங்கிவிட்டேன். 'டோரு' அமுலிலிருந்தபடியால் விசேடமாக அரசாங்க அலுவலகங்களில் பொதுமக்களுக்கு அநேகம் சிக்கல்கள் ஏற்பட்டன. பிரதானமாக வர்த்தகர்கள் அதிகம் திண்டாடினர். இது சம்பந்தமாக ஏற்பட்ட வழக்குகள், விசாரணைகள் ஆகியவற்றுக்கு அநேகமாக என்னையே பலரும் ஏற்படுத்தினர்கள். அதிலிருந்து எனக்கு அதிக வருமானம் கிடைத்தது. சுய அனுபவத்தால், ஆற்றலால், முதலாம் உலக மகாயுத்த நிகழ்ச்சிகளின்அறிவால் அதிக வரும்படியைச் சம்பாதிக்க நேர்மை வழியில் எனக்கு முடிந்தது. கஷ்டமும், நஷ்டமும் எனக்கு நன்மையாகவே அமைந்தன.

ஒருநாள் காலையில் டி. எஸ். என்னுடன் தொலை பேசியில் பேசினர். சட்டசபை முதல்வரும், மந்திரி குழு உபதலைவருமாக அவர் அப்போதிருந்தார். அத்துடன் விவசாயம், காணி, நில அபிவிருத்தி மந்திரியும் அவரேதான். அவரின் காரியாலயம் கொழும்பு யூனியன் பிளேஸில் இருந்தது. உள்நாட்டு அரசியல் விவகார பாதுகாப்பு அதிகாரியின் காரியாலயமும் அதே கட்டடத்திலேயே இருந்தது. ஒலிவரின் அறையும், டி. எஸ். ஸின் அறையும் அக்கம்பக்கமான இரு அறைகள் ஆகும். நான் தொலை பேசி அழைப்பின் பேரில் டி. எஸ். ஸின் காரியாலய அறைக்குள் பிரவேசித்தேன். ஒலிவரும் டி. எஸ்.ஸுடன் காணப்பட்டார். முதலில் அவர்கள் எனது உள்ளத்தை அனுமானிக்கும் முயற்சியில் ஆரம்பித்தனர். அதாவது நான் ஒலிவருக்கு உப-அதிகாரியாகக் கடமைப் பொறுப்பேற்கச் சம்மதமா என்று என்னிடம் கண்ணியமாக வினவினர். ஒலிவருக்கு உபஅதிகாரியாகக் கடமையாற்றுவதையிட்டு நான் ஒரு போதும் மனஸ்தாபம் அடையமாட்டேன் என்று சொன்னேன். பின்னர் எனது உப அதிகாரிப் பதவிக்குரிய சம்பள விபரம்பற்றிப் பேசத் தொடங்கினர். நான் அப்புக்காத்துப் பயிற்சியிலிருந்து பெறும் வருமானத்தை டி. எஸ். ஸுக்கு எடுத்துரைத்தேன். அவர் அதைக்கேட்டுப் பிரமிப்பெய்தினர். ஒலிவர் தனது மேலதிகாரிப் பதவியில் பெறும் சம்பளத்திலும் மிகவும் கூடிய தொகையாக எனது மாதாந்த வருமானம் இருந்தது கண்டு தரிப்பெடுக்கமுடியாது சற்றுத் திகைத்தனர் இருவரும். உடனே டி. எஸ். "நிலைமையைத் திர ஆலோசித்துப் பின்னர் முடிவு செய்யலாம்"என்று கூறினர். அவரவர் பாட்டில் நாங்கள் எமதிடம் சென்றுவிட்டோம். எனக்குப் பண உதவி செய்வதற்கு எடுத்த முயற்சி தோல்வி அடைந்தது கண்டு டி. எஸ். மிகவும் மனக்குழப்பமடைந்திருந்ததை நான் நன்குணர்ந்து கொண்டேன். நான் கணிதசாஸ்திரப் பேராசிரியராகக் கடமையாற்றிய போது எடுத்த சம்பளத்திலும்பார்க்க் எனது வருமானம் அப்பொழுது குறைவாகவே இருந்திருக்கும் என்பதும் எனது அப்போதைய நிலைதரம் முன்னையமாதிரி அவ்வளவு தாராளமாக இருக்காது என்பதும் அவருடைய மனப்பாடமாக இருந்தது போலத் தெரிந்தது. அவருடைய நல்ல நோக்கம் அனுகூலப்படாது, தேவையற்றதாகவும், அனவசியமானதாகவும் கருதப்பட்டதோடு, வீண் வேலையாக முடிந்துவிட்டதே என்று அவர் உள்ளூர வேதனைப் பட்டதையும் நான் அறிவேன். அதிவிரைவில் ஐவர் ஜென்னிங்ஸ் உள்நாட்டு அரசியல் விவகார பாதுகாப்பு உபஅதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவருக்கு அந்த நியமனத்தின்பேரில் விசேட சம்பளம் ஒன்றுமில்லை. அப்படியிருந்தாலும் அதிகமில்லை. அவர் சர்வகலாசாலைக் கல்லூரிப் பிறின்சிப்பல் என்னும் பதவிக்குரிய சம்பளத்தையே பெற முடிந்தது.

### பலவித தடை

இரண்டாவது உலக மகாயுத்தம் அழிவுத் துறையிலும் அதிபயங்கரமான முறையிலும் ஆவேசத்தோடு முன்னேற்றமடைந்தது. நேசநாடுகளின் நிலைமை தூணிலிருந்து துரும்பான கதையாகி வந்துகொண்டிருந்தது. பலவிதமான இறக்குமதித் தடைகளும் விதிக்கப்பட்டன. உணவுப்பொருள்கள், உடை, ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள், விலைவாசி, நாணய மாற்று ஆகியன எல்லாம் கட்டுப்பாடுகளுக் கமைந்தேயாகவேண்டும் என்பது சட்டமுறையாய் நடைபெற்று வந்தது.

பர்மாவிலும், அஸ்ஸாமிலும் பிரித்தானியப் படைக்கலங்களும், துருப்புகளும் சின்ன பின்னமாக்கப்பட்டுச் சிதைவெய்தின. இதன்விளைவாக பிரித்தானியரின் வெளியுலக அடிப்படைக்கொள்கையில் பெருத்த மாற்றமொன்று ஏற்படவேண்டியது அவசியமாயிற்று. பிரித்தானிய சாம்ராஜ்யக் கொள்கையின்படி பிரிட்டிஷ்காரர் இந்தியாவில் இருப்பதெல்லாம் இந்தியாவைப் பாதுகாத்து மேலோங்கச் செய்வதற்காகவேதான் என்பது பேச்சாகும். இந்த வியாக்கியானத்தை விட்டுக் கொடுக்கவேண்டிய, அதாவது நல்ல பாதையில் கொள்கையை நேர்சீராய் மாற்றியமைக்க வேண்டிய சந்தர்ப்பம் விரைந்து வந்துகொண்டேயிருந்தது.

மகாத்மா காந்திஜியின் தலைமையில் இந்திய தேசிய விடுதலைப் போராட்ட இயக்கம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து உக்கிர மடைந்தது. அதன் அதிர்ச்சி அகில உலகமும் பரவியது. அன்டைநாடாகிய எமது இலங்கையிலும் அதிகமாக உணர்ச்சி வேகத்தைத் தூண்டி விடுவதற்கு அதுவுமோர் முக்கிய காரணமாயிருந்தது. வெளிப்பார்வைக்கு அப்படியொன்றும் விளங்காது போகலாம். ஆயின் நுண்மாணுழைபுலம் கொண்டு நோக்கின், காந்தியார், அன்னை நாட்டின் அடிமை விலங்கறுத்த சருக்கம், எமது "அரசியல் அழுக்காறு" நீங்கி "சுதந்திர ஒழுக்காறு" உற்பத்தியாக உதவி செய்து ஊக்கமும் ஆக்கமும் ஈட்டிததந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

### குண்டு வீச்சு

திருக்கோணமலை, பகைவரின் குண்டுவீச்சால் சேதமடைந்தது. 1942ம் ஆண்டில் ஈஸ்டர் தினத்தன்று கொழும்புமா நகரம் குடிபோன, கைவிடப்பட்டவோர் நகரமாகச் சோபையிழந்து காட்சியளித்தது. புகழ்ந்து கொண்டாடிப் போற்றப்பட்டுவந்த பிரிட்டிஷார் பெருமையும், ஆதிக்கப் பலமும் இலங்கை மக்களால் ஐயுறவுக் கண்களோடு நோக்கற்படலாயின.

அரசியல் சீர்திருத்த மின்னல்கள் இலங்கை அரசியல் வானில் தென்படலாயின. அச் சீர்திருத்தத் திட்டங்களைக் கொண்ட இராஜாங்கப் பத்திரங்கள் இலங்கை அரசாங்கத்தினூடாகக் குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கும் டி. எஸ். சேனநாயக்காவின் தலைமையில் இயங்கிய மந்திரி குழுவிற்குமிடையே பரிமாறப்பட்டன. ஆபிரிக்காவிலிருந்து ஏராளமான காப்பிரிப் படைவீரர்களைத் திரட்டி இங்கு

(10ம் பக்கம் பார்க்க)

# வெற்றிச் சின்னம்

மூலம்: தாகூர் தமிழாக்கம்: சரோஜினி நடராசா

**"அன்று ராட்சதனுடைய கொலைக்காட்சி வெகு அழகாக இருந்தது. அரசனும் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக வேஷம் பூண்டான். ஆனால் அந்தக் காட்சி நிகழ்ந்த ஒரு மணி நேரத்துக்குள் பத்து ராட்சதர்கள் இறக்கும் காட்சியை அவரே ஏற்று நடிக்கும்படியாகிவிட்டது."**

## சிறுகதை

போர்க் களத்திலிருந்து துர்ச் செய்திகள் வந்தன. வேந்தனின் மனம் நிலை தடுமாறியது. சோர்ந்த உள்ளத்துடன் அரண்மனைத்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். தோட்டத்தின் மதிற்சுவர் ஓரமாக ஒரு ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள் மர நிழலில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். 'இந்த விளையாட்டிற்கு பெயரென்ன?'- அருகில் வந்த மன்னர் குழந்தைகளிடம் கேட்டார்.

"இன்று நாங்கள், இராமனும் சீதையும் நாடுகடத்தப்பட்ட காட்சியை நடித்துப் பார்க்கிறோம்" என்றார்கள் அக் குழந்தைகள்

அரசனும் அவ்விடத்திலமர்ந்து அவர்களது நடிப்பைக் கவனிக்கலானார்.

பையன், பெண்ணிடம், "மா பயங்கர வனமாகிய தண்டகாரண்யத்தைப் பார்த்தாயா? நாங்கள் ஒரு சிறு குடிசை அமைத்து இங்கேயே தங்கலாம்" என்றான்.

இருவரும் சேர்ந்து வைக்கோல் குவியலையும் சிறு சுள்ளிகளையும் அடுக்கினார்கள். அவர்களுடைய சுறுசுறுப்பைப் பார்த்தால் ஒரு கணப்பொழுதைக்கூட வீணாக்க மாட்டார்கள் போல் தோன்றியது.

பெண் மர இலைகளைக் கொண்டு சமையல் செய்ய ஆரம்பித்தாள். ஆனால் நெருப்பில்லாத சமையல்தான். இளவரசி சீதை நாடுகடத்தப்பட்ட நாயகனுக்கு உணவு தயாரிப்பதில் ஈடுபட்டாள்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரசன், அவர்களை நோக்கி, "எல்லாம் முறையாகத்தான் நடைபெறுகின்றன. ஆனால் ஒரு குறை, அதாவது, ராமனுடன் யுத்தம் புரிந்து மாண்ட கொடிய ராக்ஷதனைக் காணவில்லையே" எனக் கேட்டார்.

பையனும் தன்னுடைய தவறை உணர்ந்து ஒப்புக்கொண்டான். அவனுடைய தடுமாற்றத்தைக் கண்ட வேந்தன் "சரி நானே அந்தக் கொடிய ராக்ஷதனாக இருக்கிறேன்" என்றார்.

பையன் ஒரு கணம் அரசனை உற்று நோக்கினான். "நீங்கள் ராக்ஷதனாக இருப்பதானால் என்னால் அடையும் தோல்விகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றான்.

"நான் எந்தத் தோல்வியையும் ஏற்பதற்குத் தயார். நீயே இதை நேரில் காணலாம்" என்றார் மன்னர்.

அன்று ராக்ஷதனுடைய கொலைக்காட்சி வெகு அழகாக இருந்தது. அரசனும் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக வேஷம் பூண்டான். ஆனால் அந்தக் காட்சி நிகழ்ந்த ஒரு மணி நேரத்துக்குள் பத்து ராக்ஷதர்கள் இறக்கும் காட்சியை அவரே ஏற்று நடிக்கும்படியாகிவிட்டது.

ராமனும் சீதையும் தண்டகாரண்யத்தில் வசிக்கும்பொழுது பறவைகளெல்லாம் எவ்வாறு இசைக்குரல் எழுப்பினவோ அதேபோல் அன்றும் இசைபாடின. ஆதவனும் வன விருட்சங்களின் மேல் ஒளிக்கிரணங்களை முன்போல் பரப்பினான். இவையெல்லாம் ராமனும் சீதையும் வாழ்ந்த காலத்தை நினைவூட்டின.

குழந்தைகளின் விளையாட்டுக்களில் பங்குகொண்ட வேந்தனின் உள்ளம் இழந்த அமைதியை மீண்டும் பெற்றது. மந்திரியை அழைத்து "இவர்கள் யாருடைய குழந்தைகள் என்பது உமக்குத்தெரியுமா?" என வினவினார். "அந்தப் பெண் என்னுடைய மகள்; பெயர் ருஷிரா. பையன் நமது புரோகிதனின் மகன் கௌசிகன்" என்றார் மந்திரி.

இதைக்கேட்ட அரசர் "என்னுடைய விருப்பத்தின்படி இவ்விரு குழந்தைகளும் வளர்ந்தபின் கணவன் மனைவியாகவே இருப்பார்கள்" என்றார்.

இதைக்கேட்ட அமைச்சர் மறுமொழி கூறாது நின்றார். பின் அரசரின் கருத்தை ஒப்புக்கொள்ளாத பாவனையில் சிரம் தாழ்த்தினார்.

மன்னர் கௌசிகனைத் தன் ஆட்சியிலிருக்கும் உயர்ந்த பள்ளிக்கு அனுப்பினார். அதி உன்னதமான மரபைச்சேர்ந்த ஆண்களும் பெண்களுமே அந்தப் பள்ளியில் வாசித்துவந்தார்கள். அதே பாடசாலையில்தான் மந்திரியின் மகள் படித்துவந்தாள். ஒரு ஏழைப் புரோகிதனின் மகனாகிய கௌசிகனை பாடசாலையில் வைத்திருப்பது ஆசிரியர்களுக்குச் சம்மதமில்லை. இருந்தும் அரசனுடைய கட்டளையை மீறமுடியாதவர்களாக இருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் ருஷிரா இருதலைக் கொள்ளியெறும்பு போலானாள். மாணவ மாணவிகளெல்லோரும் அவளையும் கௌசிகனையும் சுட்டிக்காட்டி (குறிப்பிட்டு) ரகசியக் குரலில் ஏதேதோ பேசிக்கொள்வார்கள். இவற்றைப் பார்க்கும் பொழுதெல்லாம் ருஷிராவின் கன்னங்கள் அனற்பிழம்பாக ஜொலிக்கும். கண்களில் சீற்றம் பொங்கும்.

சிலசந்தர்ப்பங்களில் ருஷிரா கைதவறி நழுவவிட்ட புத்தகத்தை கௌசிகன் எடுத்துக்கொடுத்தால் "நன்றி" என்று ஒரு வார்த்தைகூடக் கூறமாட்டாள். அவன் பேசினாலும் மறுமொழி சொல்ல மாட்டாள்.

ருஷிராவின்மேல் பள்ளிக்கூட ஆசிரியர்கள் கொண்டிருக்கும் ஆதரவுக்கு எல்லை கிடையாது. அவர்கள் எல்லோருடைய ஒரே எண்ணமும் ருஷிரா கௌசிகனைவிட படிப்பில் திறமையுடையவளாக இருந்து அவனுக்கு மேலாக எல்லாவற்றிலும் திகழவேண்டும் என்பதே. ருஷிரா கூட இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்தலானாள்.

கௌசிகனைப் படிப்பில் வெல்வது ருஷிராவுக்கு இலகுவாக இருந்தது. காரணம் கௌசிகன் தன் பாடப் புத்தகங்களைப் படிப்பதில்லை. சுதந்திரமாகப் பாடவும், நீரோடைகளில் நீந்தவும், ஏகாந்தமான இடங்களில் வசிக்கவும் அவன் மனம் விழைந்தது.

ஆசிரியர்கள் அவனுக்குக் கடமையை உணர்த்தினர்: "ஏன் நீ உன் படிப்பில் கூடிய கவனஞ் செலுத்துவதில்லை?"

அதற்குக் கௌசிகன் "என்னுடைய கவனமெல்லாம் படிப்பில் மட்டும் செல்லவில்லை. வேறும்பல வகையான விஷயங்களில் அக்கறை கொண்டிருக்கிறேன்" என்றான்.

"அவசியமற்ற விஷயங்களில் உன் கவனத்தைச் செலுத்தாதே" எனப் புத்தி கூறினர் ஆசிரியர்.

"அப்படியானால் எனக்குப் படிப்பில் இருக்கும் கவனமும் மறைந்துவிட வேண்டியதுதான்" என்றான் கௌசிகன்.

சிறிது நாட்களுக்குப்பின் மன்னர் ஆசிரியரிடம் "உங்கள் மாணவர்களுள் கெட்டிக்காரர் யார்?" எனக் கேட்டார்.

"ருஷிரா" — பதிலளித்தார் ஆசிரியர்.

"அப்படியானால் கௌசிகனைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?" என்றார் மன்னர்.

"பாடசாலையிலிருந்து அவன் அதிகம் ஒன்றும் கற்றிருக்க மாட்டான் என்றே எண்ணுகிறேன்" என்றார் ஆசிரியர்.

அதற்கு மன்னர் "ருஷிராவுக்கும் கௌசிகனுக்கும் திருமணஞ் செய்துவைக்க விரும்புகிறேன்" என்றார்.

ஆசிரியருக்கு ஏளனச் சிரிப்பை அடக்க முடியவில்லை. இது "அந்திவேளைக்கும் புலர் காலைக்கும் நடக்கும் திருமணமாகவே முடியும்" என்றார் ஆசிரியர்.

அரசன் அமைச்சரை அழைத்து உம்முடைய மகளுக்கும் கௌசிகனுக்கும் தீர்மானமான திருமணத்தை இனியும் காலம் தாழ்த்தக் கூடாது என்றார்.

"அரசே, இந்த ஏற்பாட்டிற்கு என் மகள் இணங்க மறுக்கிறாள்" என்றார் மந்திரி. அதற்கு மன்னர் "எந்தப் பெண்ணும் தன் மனத்திலுள்ள விருப்பங்களை வெளிப்படையாகக் கூறுவாளா?" என்றார்.

"ஆனால் அவளுடைய அழுகை இதற்குச் சான்றாகவிருக்கிறது."

"அப்படியானால் உம்முடைய மகள் கௌசிகனைத் தனக்கேற்ற கணவனல்லன் என்று புறக்கணிக்கிறாளா?

"அதுதான் உண்மை."

"சரி; இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ருஷிராவுக்கும் கௌசிகனுக்கும் இடையில் ஒரு விவாதத்தை என் முன்னால் நடத்த ஏற்பாடு செய்கிறேன். இதில் கௌசிகன் வெற்றியடையாவிட்டால் திருமணம் நடைபெறாது."

அரசசபை கூடியது. மன்னர் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அவரின் பாதங்களின் பக்கத்தில் இருந்தான் கௌசிகன்.

சிறிது நேரத்தில் ஆசிரியர் அமைச்சரின் மகள் ருஷிராவுடன் அவையில் பிரவேசித்தார். கௌசிகன் எழுந்து நின்று இருவரையும் வணங்கினான். ருஷிரா கௌசிகனை கடுமையாக நோக்கினாள்.

ஒருநாளும் இவ்விருவரும் விவாதங்களில் ஈடுபட்டது கிடையாது. இதற்கு முக்கிய காரணம் மாணவர்களே. அவர்கள் கௌசிகனை வெறுத்ததுடன் விவாதங்களில் அவன் பங்குபற்ற விடாமல் தடுத்தனர். எஃகில் வெளிச்சம்பட்டு அது பிரகாசிப்பது போல் அன்று கௌசிகனுடைய விவாதத்தில் அலட்சிய பாவமும் ஏளனமும் நிறைந்திருந்தது.

ஆசிரியர்கள் யாவரும் ஆச்சரியமுற்றிருந்தார்கள். ஆனால் அவர்களது வதனத்தில் சினத்தின் அறிகுறி எந்தச்சமயமும் காணப்படவில்லை. ருஷிராவின் வளைந்த புருவங்களிலிருந்து வேர்வைத் துளிகள் நீர்ச்சரம்போல் உருண்டோடின. அவளுடைய புத்தி தடுமாறியது. ருஷிராவைத் தோல்விப் படுகுழியில் தள்ளியபின்தான் கௌசிகனுடைய நீண்ட விவாதம் முடிவுற்றது.

ஆசிரியரின்குரல் கோபத்தை எதிரொலித்தது. ருஷிராவின் கண்களில் நீர் நிரம்பிப் பளபளத்தது.

மன்னன் அமைச்சர் பக்கம் திரும்பி "இனி திருமணத்திக்கு ஆயத்தம் செய்யலாம்தானே?" எனக் கேட்டார்.

ஆனால் கௌசிகன் எழுந்து கைகளைக் கட்டியபடி "மன்னிக்க வேண்டும் வேந்தே. எனக்கு இந்தத் திருமணம் இடம் பெறுவது விருப்பமில்லை" என்றான்.

மன்னன் வியந்தான்.

"நீ வெற்றியின் சின்னத்தை அடைய மறுக்கிறாயா?" அரசர் கேட்டார்.

அதற்குக்கௌசிகன் "மன்னா! வெற்றி என்னுடையதாக இருக்கட்டும். ஆனால் பரிசை வேறு யாராவது அடையட்டும்" என்றான்.

ஆசிரியர் தன் கருத்தைத் தெரிவித்தார். "அரசே, இன்னும் ஒரு வருடம் கழியட்டும். அந்தக் கால எல்லையில் மீண்டும் ஒரு விவாதத்தை ஏற்படுத்தித் தீர்ப்பைஅறியலாம்."

அத்துடன் கல்யாண ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டன.

கௌசிகன் பாடசாலையிலிருந்து விலகினான். மரங்கள் அடர்ந்திருக்கும் வனங்களிலும் மலைகளின் மேலும் சஞ்சரித்துப் பொழுதைப் போக்கினான்.

ஆசிரியர் தன்னுடைய சக்திகளையெல்லாம் ஒருமுகப்படுத்தி ருஷிராவுக்குப் பயிற்சி அளிப்பதில் முயன்றார். ஆனால் அவளுக்கு நடந்ததென்ன? அவள் எண்ணங்கள் எல்லாம் எங்கோ நிலைத்து நின்றன.

ஆசிரியருக்கு இது ஏமாற்றத்தைக் கொடுத்தது. "நீ படிப்பில் கவனஞ் செலுத்தாதுவிட்டால் மறுபடியும் தோல்வியை ஏற்கவேண்டிய நிலைவரும்" என்றார் ஆசிரியர். ருஷிராவும் தோல்வியையே ஆவலுடன் எதிர் நோக்கினாள். படிப்பில் அதிக நாட்டஞ் செல்லவில்லை.

ஆசிரியர் சீற்றத்துடன் மொழிந்தார்: "என் வாழ்நாளில் இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் மாணவிகளுக்குப் பயிற்சியளிக்கமாட்டேன். சமய நூல்களில் எனக்கு அளவு கடந்த அறிவுண்டு. ஆனால், பெண்களின் உள்ளத்தைப் பற்றியல்ல."

ஒருநாள் அமைச்சர் அரசனிடம் வந்து "அரசே! என் மகளுக்கு ஒரு வரன் நிச்சயமாகியிருக்கிறது. உறவிலும், செல்வத்திலும் சில ஒற்றுமைகள்கூட உண்டு. தங்கள் உடன்பாட்டைத் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றார் அமைதியாக.

அரசர் கேட்டார்: 'இதற்கு உன் மகள் என்னகூறுகிறாள்?"

அமைச்சர் பதிலிறுத்தார்: "ஒரு பெண் தன் மனதிலுள்ள விருப்பங்களை வெளிப்படையாகக் கூறுவாளா?"

ஆனால் அவளுடைய அழுகை இம்முறை அது சான்றாக அமையவில்லையா? அமைச்சர் மறுமொழி கூற முடியாது தவித்தார்.

அரசன் அரண்மனைத் தோட்டத்திலிருந்தபடி ருஷிராவை அழைத்துவர ஆள் அனுப்பினார். ருஷிரா வந்தாள்.

அரசர் கேட்டார்: "ருஷிரா உனக்கு அன்று விளையாடிய ராமர் வனவாசக் காட்சிகள் நினைவிருக்கின்றனவா?"

ருஷிரா நாணமுடன் வேறெங்கோ பார்வையைச் செலுத்தினாள். அரசர் கூறினார் "இன்று அதே காட்சியை மறுபடி நடித்துப்பார்க்க ஆவலாக இருக்கிறது."

ருஷிரா தன் முகத்திரையைச் சிறிது அகற்றிவிட்டு மௌனஞ் சாதித்தாள். "காடிருக்கிறது" என்றார் அரசர். "ஏன், இளவரசன் ராமன்கூட இருக்கிறான். ஆனால் இளவரசிதான் நின்று கொண்டிருக்கிறாள். ருஷிரா, உனக்கு விருப்பமானால் நீ இளவரசியின் பாகத்தை ஏற்கலாம்" என்றார்.

ருஷிரா மன்னர் அண்டை வந்து பாதங்களைத் தொட்டு வணங்கினாள். "ஆனால் ருஷிரா இம்முறை ராக்ஷதனாக என்னால் நடிக்க முடியாதே" என்றார் அரசர் நகைத்தவாறு.

ருஷிரா தன் கண்களை அகல விரித்து மன்னனை நோக்கினாள். "இம்முறை ராக்ஷதனாக நடிப்பதற்கு ஏற்றவர் உன்னுடைய ஆசிரியர்தான்" என்றார் மன்னர்.


## விசேஷ இறக்குமதி!

உங்கள் வீடுகளை அழகாக
அலங்கரிப்பதற்கும்
அதிக காலம் பாவிக்கக்கூடிய
திரம் கம்பளங்கள், பல கலர்களிலும்
விற்பனைக்கு உண்டு

| | |
|---|---|
| 9' x 12' | 407-00 |
| 8' x 10' | 302-00 |
| 6' x 9' | 190-00 |
| 5' x 8' | 142-00 |
| 4' x 7' | 93-00 |
| 3' x 6' | 61-00 |
| 2' x 5' | 42-50 |
| 2' x 4' | 27-25 |

### ஹான்ட்லூம்ஸ்

(இந்திய அரசாங்கம்)

47, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

# உலகமேடை

டி. எம். எம்.

## நாஸரின் செல்வாக்கு

ஸிரியாவின் புதிய ராணுவ ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சிநடத்திய நாஸர் ஆதரவாளர்கள் தோல்வியடைந்தது எதிர்பார்க்கப்பட்ட முடிவேயாகும். கிளர்ச்சிக்காரர்களுக்கு செல்வாக்கு இருந்திருக்குமானல் ஐக்கிய அராபியக் குடியரசிலிருந்து முன்பு ஸிரியா பிரிந்திருக்காது. ஸிரியாவில் ஜனதிபதி நாஸருக்கு உண்மையில் எவ்வளவு சக்தி இருக்கிறதென்பது இம்முறைதான் தெளிவாகத்தெரிந்திருக்கிறது. நிலைமையை உணர்ந்து தானே என்னவோ அலப்போவிலிருந்து ராணுவ, விமானஉதவி கோரிய கிளர்ச்சிக்காரர்களுக்கு எகிப்து செவிசாய்க்கவில்லை. மேலும், ஸிரியாபிரச்சினை ஒரு சர்வதேசப் பிரச்சினையாகி விடுமோஎன பலநாடுகள் அஞ்சின. புதிய கிளர்ச்சியைத் தொடர்ந்து அந்நியநாடுகள் அங்கு தலையிடலாம் என்ற எண்ணமே இதற்குக் காரணம். ஆனல் ஸிரியா வ்ஷயத்தில் தாம் மத்தியஸ்தம் செய்யத் தயாராய் இருப்பதாக ஜனதிபதி நாஸர் அறிவித்தது இந்த நாடுகளுக்கு ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.

புதிய கிளர்ச்சிக்காரர்களின் கை உண்மையில் ஓங்கியிருந்திருக்குமானல் ஜனதிபதி நாஸர் என்ன நடவடிக்கை எடுத்திருப்பார் எனச் சொல்வது கஷ்டம். கிளர்ச்சிக்காரர்களுக்கு அவர் ராணுவஉதவி அளித்திருப்பாரா இல்லையா என்பது அப்போதுதான் தெரியும். ஸிரியாவில் தமது நிலை பலமானதாய் இல்லை என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது என்பது பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய அராபியக் குடியரசிலிருந்து அந்நாடு பிரிந்தபோது, நாஸர் முழு ராணுவ நடவடிக்கை எடுத்துக் கொள்ளாதது இதை நிரூபிப்பதாய் இருந்தது. இப்போது கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கைக்கு இணங்கி அவர்களுக்கு உதவி அனுப்பாதது மேலும் அதை நிரூபித்திருக்கிறது. மத்தியஸ்தம் செய்ய முன்வருவதாய் அவர் அறிவித்தது, ஸிரியாவில் தமது செல்வாக்கை இன்னும் கொஞ்சம் வளர்த்துக்கொள்ளலாம் என்பதாகவும் இருக்கும். மத்திய கிழக்கில் வேகமாக வளர்ச்சி பெற்று வந்த நாஸரின் செல்வாக்குக்கு முட்டுக்கட்டையிட்டது ஈராக்புரட்சியேயாகும். எகிப்தில் பாரூக் மன்னர் விரட்டப்பட்டு ஜெனரல் நகீப் பதவிக்கு வந்தபின் நாஸரின் செல்வாக்கு அதிகரித்ததென்பதும், பின் நகீப்பும் ஒழிக்கபட்டு நாஸர் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து அவருக்கு மத்திய கிழக்கில் வீர வணக்கம் செலுத்தப்பட்டுவந்தது என்பதும் அறிவோம். சூயஸில் நாஸர் காட்டியதீரம் பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடனை பதவி இழக்கச்செய்து, ஆங்கிலோ-பிரெஞ்சு - இஸ்ரேலிய படைகளை வாபஸ் பெறச் செய்து, ரஷ்ய செல்வாக்கை அங்கு வளர்த்து விட்டது. கூடவே,நாஸரின்செல்வாக்கும் அரபு நாடுகளில் வளர்ந்தது. ஆனல் இந்தச் செல்வாக்கு வளர்ச்சிக்கு, ஈராக்கில் மன்னர் பைசால் படுகொலை செய்யப்பட்டு, ஜெனரல் கரீம்காசிம் பதவிக்கு வந்தபின் முட்டுக்கட்டை இடப்பட்டது. நாஸரின் தலையீட்டை ஜெனரல் காசிம் விரும்பவில்லை. ரஷ்யா விஷயத்தில் யுகோஸ்லேவியா செய்தது போல் - அமெரிக்கக் கண்டத்தில் கியூபா செய்தது போல்,காசிமும் நாஸரை லட்சியம் செய்யவில்லை. அதாவது, முதலில் ஈராச், நாஸரின் செல்வாக்கு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிட்டது என்றும் ஸிரியா அவருக்கு ஏற்கனவே உள்ள செல்வாக்கைக் குறைத்துவிட்டது என்றும் சுருக்கமாகக்கூறலாம். எனவே தான் அராபிய மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதை விரும்பவில்லை நெருக்கடி ஏற்பட்ட ஒவ்வொரு சமயமும் கூறியிருக்கிறர் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. மத்தியகிழக்கில் நாஸர் ஆதிபத்தியம் ஏற்படுவதற்குப் பதிலாக உடனிருந்துவாழும் கொள்கையே இப்போது இருக்கிறது. ஈரான், ஸவூதி அராபியா, ஈராக் ஆகிய நாடுகளின் தலைமை இன்னும் பலவீனப்படாமல் இருப்பது அதற்கோர் உதாரணமாகும்.

## இந்திய விமானப்படை

சமீபத்தில் இந்தியவிமானப் படையின் 29-வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது இந்திய விமானப்படையின் வளர்ச்சி பற்றி பாதுகாப்பு மந்திரியும் முப்படைத்தளபதிகளும் மிகவும் பெருமை கொண்டுள்ளது நியாயமானதேயாகும். 1947-ம் ஆண்டு ஒரு சில "டக்கோடா" விமானங்களையும், "ஸ்பிட்பயர்" விமானங்களையும் மட்டும் கொண்டிருந்த விமானப்படை, இப்போது மாபெரும் பாதுகாப்பு அணியாக பல்கிப்பெருகியிருக்கிறது. "ஆவ்ரோ 748" ஜெட்விமானங்கள், ஒலியைவிட வேகமாகச் செல்லும் "சூப்பர் ஸானிக்" விமானங்கள் ஆகியவற்றை இந்தியா இப்போது உற்பத்திசெய்ய ஆரம்பித்துள்ளது என்பதை அறியும்போது ஜெட் நாகரீகமும், மாட்டுவண்டி நாகரீகமும் கலப்பாகக் கொண்ட நாடாக, நவீன இந்தியாவை நாம் காண்கிறோம்.

இந்திய ராணுவத்துக்கு, விமானப்படை ஜீவநாடியாய் விளங்குகிறது. உலகிலேயே மிகச் சிறந்த ராணுவங்களில் ஒன்றாக இந்திய ராணுவம் கணிக்கப்படுகிறது. இப்போது அதன் விமானப்படை ஆசியாவிலேயே மிகப்பெரிதாக வளர்ந்திருக்கிறது. அதே சமயம், போர் விமானிகளின் திறமை எந்த நாட்டு விமானியின திறமைக்கும் குறைந்ததாக இல்லை என்பது அதிசயமான விஷயம். இந்தியாவைப் பொறுத்தவரை ராணுவம் உடல் என்றால், விமானப்படை அதன் உயிராய் விளங்குகிறது எனலாம். ராணுவ ரீதியில் பாரதநாட்டுக்கு கடல் எதிரிகள் கிடையாது. ஆனல் தரையை எல்லையாகக் கொண்டு இருநாடுகள் இந்தியாவின் பாதுகாப்புக்கு அபாயமாய் விளங்கிவருகின்றன. பாகிஸ்தானும், சீனவுமே அவைகள். இருநாடுகளுடனுள்ள எல்லைத் தகராறில் ராணுவத்துக்கு உயிராய்இருப்பது விமானப்படையேயாகும்.

1947-ம் ஆண்டில் ஒரு சில விமானங்களை மட்டும் கொண்டிருந்த விமானப்படை, 1954-ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிபெற ஆரம்பித்தது. காஷ்மீர் போர் நடவடிக்கையின் போது தான் விமானப் படையின் அவசியம்பற்றி உணரப்பட்டது. மேலும், தென் கிழக்காசிய பாதுகாப்புக் கூட்டில் பாகிஸ்தான் சேர்ந்தபின் அந்நாட்டுக்கு நவீன ஜெட் விமானங்களை அமெரிக்கா சப்ளை செய்ததைத்தொடர்ந்து, பாகிஸ்தானின் பலத்துக்கேற்ப தனது பலத்தையும் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற உணர்வு இந்தியாவுக்கு ஏற்பட்டது. சீன ஆக்கிரமிப்பு இந்த உண்மையை மேலும் நன்கறியச் செய்தது

ராணுவ சாதனங்களைப் பொறுத்தவரை சுயதேவை பூர்த்தியே சிறந்தது என்பது இந்தியப் பாதுகாப்புக் கொள்[illegible] காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையின் வெற்றியே "ஆவ்ரோ", "சூப்பர் ஸானிக்" விமானங்களின் உற்பத்தியாகும். ஜெட் வெடிகுண்டு விமானங்களை இந்தியா உற்பத்திசெய்ய ஆரம்பித்தவுடன் இந்த சுயதேவைப்பூர்த்தி வெற்றிபெற்று விடும் என ராணுவ தந்திரிகள் அபிப்பிராயப்படுகிறர்கள். சீனவுடன் மோதல் ஏற்படும் பட்சத்தில், இந்திய விமானப் படையின் சாதனை பிரமாதமாய் இருக்கும் என பலமேற்கு நாட்டு ராணுவ நிபுணர்களும் அபிப்பிராயம் கொண்டுள்ளனர். சீன அப்போது வெற்றிபெறாது எனத் தீர்மானமாயும் அவர்கள் கூறுவது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட ஒரு நாட்டிலிருந்து போர் விமானங்களை இந்தியா வாங்குவதில்லை என்பதும், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா போன்ற சகல நாடுகளிலிருந்தும் விமானங்கள் வாங்கப்பட்டுள்ளதென்பதும், விமானப்படை வீரர்கள் எல்லா விமானங்களையும் கையாளத்தக்க பயிற்சி பெற்றிருக்கிறர்கள் என்பதும், இப்போது இந்தியாவின் பூகோள, சீதோஷ்ண நிலைமைக்கேற்ப சொந்த முறையில் விமானங்களைத் தயாரிக்க அந்நாடு முயற்சி செய்கிறது என்பதும் இங்கு கவனிக்க வேண்டும். எகிப்தில் நவீன விமானப்படை இருந்தும்கூட, விமானிகளின் திறமையின்மையால் ஏற்பட்ட நஷ்டம் சூயஸ் நெருக்கடியின்போது தெளிவாகியதென்றும், ஆனல் இந்திய விமானிகள் முதல்தர திறமைசாலிகளாக ஆக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது. ராணுவத்துறையில் இந்தியாவின் பலம் பெருகிவருகிறதென்பதற்கு இவை எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

## சத்தியமூர்த்தி

சத்தியமூர்த்தி தினம் சென்னையில் கொண்டாடப்பட்ட பொழுது அவரது பார்லிமெண்ட் விவாதத்திறமை, சட்ட ஞானம், ஆழ்ந்த அறிவு ஆகியவற்றைப் பலர் பாராட்டிப் பேசினர். சத்தியமூர்த்தி என்றவுடன் அவரது பாராளுமன்ற விவாதத் திறமைதான் முதலில் ஞாபகத்துக்கு வருகிறது. டில்லி சட்டசபையில் அவர் முழங்கிய முழக்கம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபைவரை இடி முழக்கமாகக் கேட்டது என்பதை எவரும் மறந்துவிடமுடியாது. விவாதத்தின் போது, குறுக்குக் கேள்விகள் கேட்பவர்களை ஒரேஅடியாக மண்டையில் அடித்து உட்கார வைக்கும் திறமை அவரது இணையற்ற தனித்தன்மையாகும். "காங்கிரசின் சார்பாகச் சட்டசபையில் சத்தியமூர்த்தி மட்டும் இருந்தாலே போதும்" என மகாத்மா காந்தியே ஒரு முறை கூறினர் என்ருல் அவரது திறமையைப்பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை.

சத்தியமூர்த்தியைப் பற்றி எண்ணும்போது இன்னும் பல இனிய ஞாபகங்கள் நினைவுக்கு வரும். பொது மேடையிலும்சரி, பார்லிமெண்டிலும் சரி கோடை இடிபோல் அவர் கர்ஜிப்பார். அவரது வெண்கல நாதம் பிரபலமானது. கேள்வியைக் கேட்குமுன்பே அவரே அதை முடித்துவிட்டு, ஒரு கணமும் தயக்கமின்றிச் சடாரெனப் பதில் சொல்லி விடுவார்! டில்லி சட்டசபையில் கேள்வி நேரம் வந்தால் அல்லது விவாத சமயத்தில் அரசாங்கத்தின் தொடைகள் நடுங்கும்! நூற்றுக்கணக்கான [illegible] கேள்விகளை அவர் ஒருவரே கேட்டுவிடுவார். இத்தனை கேள்விகள்தான் கேட்கலாம் என்ற கட்டுப்பாடு ஒருசமயம் கொண்டுவரப்பட்டபோது, அதற்கேற்ப கேள்விகளைக் கேட்டு அதற்குச் சரமாரியான உபகேள்விகளைப் பொழிந்து தள்ளிவிட்டார்! 'சட்டம் ஒரு கழுதை; முன்னல்போனல் கடிக்கும். பின்னல் போனல் உதைக்கும்' என அடிக்கடி சொல்வார். சத்தியமூர்த்திக்கு உலகில் இரண்டு விஷயத்தில் தான் ஆசை இருந்தது. முதலில் இந்திய சுயராஜ்யம். இரண்டாவது,அவரது புதல்வியான "லக்ஷ்மி". அவரே இதைச் சொல்லியிருக்கிறர். "சத்தியமூர்த்தி மட்டும் வடநாட்டில் பிறந்திருந்தால் அவரை ஜவஹர்லால் நேருவைப்போல் கொண்டாடியிருப்பார்கள் என ஒரு தமிழ்நாட்டு அபிமானி ஒரு சமயம் கூறியது ஞாபகத்திற்கு வருகிறது. காந்திஜிக்கு நண்பர்; நேருஜிக்கு குடும்ப நண்பர். சத்தியமூர்த்தி சென்னை மேயராய் இருந்தபோதுதான் பூண்டி நீர்த்தேக்கம் உருவானது. ஒருமுறை தேர்தலில் அவர் வாக்காளர்களை வீடு விடாகச் சென்று சந்தித்தார். அப்போது அவருக்குப்போட்டியாக நின்ற அபேட்சகரான சர். ஏ. ராமசாமி முதலியாரும் வாக்காளர்களைக் கண்டுவிட்டு வரும்போது வழியில் சந்திக்க நேர்ந்தது. சர் முதலியாருடன் சத்தியமூர்த்தி கைகுலுக்கினர். அருகிலிருந்த அவரது நண்பருக்கு இது பிடிக்கவில்லை. "நீங்கள் அவருடன் கைகுலுக்கியிருக்கக்கூடாது" என்று கூறினர் அந்த நண்பர். உடனே சத்தியமூர்த்தி, "நான் கையையா குலுக்கினேன், அவரது நாடி எப்படித் துடிக்கிறது என்றல்லவாபார்த்தேன்" என்ருர் பளிச்சென்று.

தீரர் சத்தியமூர்த்தி இன்று உயிருடன் இருந்தால் தமிழ் நாட்டு அரசியலில் அவர் ஒரு சிம்மமாய் இருந்திருப்பார். ராஜாஜி பெரியவரா, சத்தியமூர்த்தி பெரியவரா என்ற விவாதம்கூட முளைத்துவிட்டிருக்கும். வித்தல் பாய் பட்டேல், சத்தியமூர்த்தி போன்றவர்கள் உலகின் எந்தப் பார்லிமெண்டிலும் முன்னணியில் நிற்கக்கூடியவர்கள். தேச விடுதலைக்காக சிறைசென்ற அவர், இதன் காரணமாகவே உயிர்நீத்தது துர்ப்பாக்கியமாகும்.

## மேற்கு இரியன்

மேற்கு இரியான் விவகாரம் இப்போது சூடுபிடித்திருக்கிறது. கரையோரத் தீவுகளில் இந்தோனேஷியர்கள் இறங்கியிருப்பதாயும் அங்கு டச்சுத் துருப்புக்களுடன் அவர்கள் கைகலப்பில் ஈடுபட்டு வருவதாயும் செய்திகள் கூறுகின்றன. ஆனல் பெருமளவான படையெடுப்பு என்று சொல்லக்கூடிய அம்சம் இதில் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. டச்சு அரசாங்கமும் இச்செய்திகளை மறுத்துள்ளது. கரையிறங்க முயற்சித்த சிலர் தாங்கள் தாக்கியதைத்தொடர்ந்து ஓடிவிட்டதாய் டச்சு தரப்பு அறிவித்துள்ளது.

வாஷிங்டனில் இரு சாராருக்குமிடையே மேற்கு இரியன் பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவரும் சமயத்தில் இந்தோனேஷியர்கள் கரையிறங்கியிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையானல், அது முறையற்ற செயலாகும். 2வது உலக யுத்த சமயத்தில் பேச்சுவார்த்தைகளின் போது மத்தியக் கடலில் ஜப்பானிய குண்டுமாரி பொழிந்த முறையற்ற செயலையே இது ஞாபகமூட்டுகிறது. ஒருவேளை, பேச்சுவார்த்தைகள் இந்தோனேஷியாவுக்குச் சாதகமாக மாறுவதற்கு இது தூண்டுகோலாய் இருக்குமென டாக்டர் சுகர்னோ நினைத்திருக்கக்கூடும். பெருமளவான தாக்குதல் மேற்கொள்ளப்படாததிலிருந்து இப்படித்தான் ஊகிக்கவேண்டியிருக்கிறது. பேச்சுவார்த்தைகளில் நிர்ப்பந்தத்தைப் புகுத்தும் ஒரு கெடுபிடி நடவடிக்கையாக இந்தோனேஷியா இச்செயலை மேற்கொண்டிருக்கலாம்,

மேற்கு இரியனில் டச்சுக்காரர்கள் தூங்கிக்கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. சமீபத்தில் அங்கு பல டச்சு யுத்தக்கப்பல்களும் நீர்மூழ்கிகளும், நாசகாரிகளும் சென்றிருக்கின்றன. அவசியமானல் மேலும் பல கப்பல்களை அனுப்புவதற்கான வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. டச்சுக்காரர்கள் அங்கு போதிய பலத்துடன் இருக்கிறர்கள் என்பதையே சமீபத்திய சம்பவங்கள் உணர்த்துகின்றன. இந்தோனேஷியர்களுக்கு இந்தப்பலத்தை முறியடிக்கும் சக்தி உண்டா என்பது சந்தேகமான விஷயம். பலாத்கார நடவடிக்கையின்மூலம் இந்தோனேஷியா வெற்றிபெறும் என நம்புவதற்கில்லை.

பேச்சுவார்த்தைகளைத் தவிர இதற்கு வேறு வழியில்லைஎனவே நம்பவேண்டியிருக்கிறது. மேலும், பலாத்கார நடவடிக்கைக்கானகாலமும் இப்போது கடந்துவிட்டது. இந்தியாவின் கோவா நடவடிக்கையைத் தொடர்ந்து உடனடியாகப் பலாத்கார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதன் விளைவுகள் சற்று மாறுபட்டிருக்கலாம். சமாதான வழியில் ராஜதந்திர முயற்சிகளே இந்தோனேஷியாவுக்கு இப்போது தேவை. ஆனல் பேச்சுவார்த்தைகளும்கூட வெகுநாள் இழுத்தடித்துக்கொண்டே போகுமெனத் தெரிகிறது.

## நேரு சுகவீனம்

இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு சமீபத்தில் சுகவீனமுற்ருர் என்ற செய்திக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விசேஷ முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்குக் காரணம் இல்லாமலில்லை. பிரதமர் நேரு அவரது வாழ்நாளில் சுகவீனமுற்றது அருமை. மிகச்சிறந்த தேகாரோக்கியம் பொருந்தியவர்களில் ஒருவராக அவர் இருந்துவந்ததே அதற்குக் காரணம். மிகவும் கடுமையாக அவர் வேலைசெய்து வருவதற்கு அவரது தேகாரோக்கியம் இடமளித்தது. முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் சர்வின்ஸ்டன் சர்ச்சில் எலிஸபெத் மகாராணியார், ஸ்ரீநேரு ஆகியோரை நோய் அணுகுவதில்லை என்பது பொதுவான ஒருஉண்மையாய் இருந்தது. பிரதமர் நேருவுக்கு இப்போது 72 வயதுக்குமேல் ஆனபோதிலும் ஓய்வின்றிக் கடுமையாக உழைத்துவந்தார். அவரது கடும் உழைப்புப்பற்றி சமீபத்தில் அவரது சகோதரி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அமெரிக்காவில் நிருபர்களிடம் குறிப்பிட்டிருந்ததை அறிந்திருக்கலாம். பொதுத் தேர்தலின் போது அவரது அயராத உழைப்பும், சுற்றுப்பிரயாணமும் தான் இதற்குக் காரணம் என வைத்தியர்களும் கூறியிருக்கின்றனர். ஆயினும் லேசான ஜுரம் மட்டுமே அவரைப் பீடித்திருக்கிறது என்பதிலிருந்து பிரதமரின் தேகாரோக்கியம் நல்லநிலையில் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நேரு சுகவீனமுற்றால் அது பிரமாதப் படுத்தப்படுவதற்கு அவர் வகிக்கும் விசேஷஸ்தானமும் ஒரு காரணம் எனலாம். ஐக்கிய இந்தியாவுக்கும், உலகின் இப்பகுதியில் ஜனநாயக சுதந்திரத்துக்கும் அவர் பாதுகாவலராய் விளங்கிவருகிறர்.

# கலை அரங்கம்

## ராட்டை படுத்திய பாடு!

### நடிகர் 'காந்திக்கு' நூல் நூற்கத் தெரியவில்லை!

கோட்ஸேயின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில் "ஏ டே ஆப் டார்க்னஸ்" என்ற படத்தை மார்க் ராப்சன் தயாரித்துவருகிறாரல்லவா? இந்தப் படத்தில் காந்திஜியின் வேஷத்தில் பம்பாயைச்சேர்ந்த இந்தியர் ஜே. எஸ். காஷ்யப் நடித்திருக்கிறார். இந்தியாவில் இவர் நடித்த காட்சிகளின் தொடர்புள்ள சில காட்சிகளை லண்டனில் தயாரிக்கவேண்டியிருந்தது. இதற்காக காஷ்யப்பை லண்டனுக்கு அழைத்துச் சென்றார், மார்க் ராப்சன்.

காந்திஜி ராட்டையில் நூல் நூற்றுக்கொண்டிருப்பதுபோல் ஒரு காட்சியைப் படத்திற்காகச் சேர்க்கவேண்டியிருந்தது. எனவே ராப்சன், "மிஸ்டர் காஷ்யப்! உங்களுக்கு ராட்டையில் நூல் நூற்கத் தெரியுமா?" என்று கேட்டார்.

எப்போதோ ஒரு காலத்தில் ராட்டையில் நூல்நூற்றிருக்கும் காஷ்யப், அதுபற்றி அடியோடு மறந்துவிட்டார். திரும்ப அதை நினைவுபடுத்திக் கொள்ளும் அளவுக்கு ராட்டையைப்பற்றி அரைகுறையாகக்கூட அவருக்கு நினைவு வரவில்லை! காந்திஜியாக நடிப்பவருக்கு நூற்கத்தெரியவில்லை! எத்தனை பெரிய அவமானம்!

"தெரியாது" என்ற உண்மையைத் தலை குனிந்தபடி தெரிவித்தார் காஷ்யப், வருத்தத்தோடு.

"பரவாயில்லை. ராட்டையில் நூற்கும் விதத்தை நான் சொல்லித்தருகிறேன்" என்று ராப்சன் சொன்னதைக் கேட்டதும் காஷ்யப் திகைத்துவிட்டார்!

இந்தியனாகிய தனக்கு ராட்டையில் நூற்கத் தெரியாதிருக்கும்போது, மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஒரு வெளிநாட்டார்—நாம் வெளியேற்றிய ஆங்கிலேயர்களில் ஒருவர்—ராட்டையில் நூல் நூற்கக் கற்றிருக்கிறார்! காஷ்யப்பின் வாய் அடைத்துப் போய்விட்டது!

வேறு வழியின்றி ராப்சனைக் குருவாகக்கொண்டு ராட்டையில் நூல் நூற்கும் விதத்தைக் கற்றுக்கொண்டு, ராப்சன் விரும்பிய அந்தக் காட்சியில் அவருக்குத் திருப்தியாக நடித்து முடித்தார் காஷ்யப்!



'வில்லி'யாக நடித்து அலுத்துப் போன நடிகை எம். என். ராஜம் இப்பொழுதெல்லாம் அதிகமான படங்களில் தோன்றுவதில்லை. "என்னை வில்லியாகவே நடிக்கச் சொல்லுகிறார்கள். ஒரேவிதமான பாத்திரத்தில் நடிப்பதில் என்ன புதுமை இருக்கிறது. இதனால் வில்லியாக நடிக்க மறுத்து விடுகிறேன்" என்று அவர் கூறுகிறார்.

## சிவாஜியின் சுற்றுலா படமாகும்

அமெரிக்கா சென்றுள்ள நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் சுற்றுப்பிரயாணம் திரைப்படமாக்கப்படும். இத்திரைப்படப் பிரதிகள் இந்தியாவுக்கும் அனுப்பப்படும்.

ஹாலிவூட்டில் தங்கியிருந்து வர வசதிகள் பெற்றுள்ள முதல் இந்திய நடிகர் சிவாஜி தான்.



நாட்டிய நடிகையான குசலமாரி 'தக்ஷ யக்ஞம்' என்ற படத்தில் பிரமாதமாக நடித்துள்ளாராம். 'பராசக்தி' மூலம் ரசிகர்களிடம் பாராட்டுப் பெற்ற குமாரி குசலி 'கொஞ்சும் சலங்கை'யில் குமாரி கமலாவுடன் போட்டி நடனமொன்றில் புதிய முறையில் ஆடியுள்ளாராம். திரையுலகில் சிறிது காலம் ஒதுங்கியிருந்த குசலிக்கு மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்து வருகிறது.

## 'முத்து மண்டபம்'

இரவு மணி எட்டு இருக்கும். மேல்மாடியில் ஒரு அறையில் கதவை நன்றாகச் சாத்திக் கொண்டு நீலமணி (விஜயகுமாரி) படுத்திருந்தார். அவர் நெஞ்சு "படக் படக்" கென்று அடித்துக்கொண்டது. அவரைப் பார்த்தால் ஏதோ கொலைசெய்துவிட்டவர் போல தோன்றுகிறது. வியர்வை உடம்பெல்லாம் பெருகிவழிந்தது. அவருக்கு கை, கால்கள் கூட அசைக்கமுடியாத அளவுக்கு ஒரே குழப்பம். கட்டிலிலிருந்து "தொபீர்" என்று விழுந்துவிட்டார். சிறிது நேரம் எங்கும் அமைதி நிலவியது. இந்த இரவு நேரத்தில் யாரோ மெத்தைப் படியேறிவருவது நீலமணி காதில் விழுந்தது. ஆம்! அது பொலிஸார் காலடிதான் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது. எப்படித்தப்பிப்பது என்றே புரியவில்லை. ஒருவேளை தவறிபக்கத்து அறையைப் பார்த்து விட்டுப் போய்விடுவார்கள் என்று அமைதியாகஇருந்தார். ஆனால் "படார் படார்"என்றுகதவைத் தட்டினார்கள். அவர் இதயம் வெடித்துவிடுவது போலாகிவிட்டது. தன்னை மீறி "கோ" வென்று கதறி சாய்ந்துவிட்டார். சிறிது நேரத்தில் "நீலமணி" என்ற குரல் கேட்டது. அவர் முகம் மலர்ந்தது; காரணம் அது அவருடைய தாத்தாவின் குரல். இந்த இனிமையான காட்சியில் விஜயகுமாரி அருமையாக நடித்துள்ளார். முழுக்கமுழுக்க 'சஸ்பென்ஸ்' உள்ள இக்கதையை ராதாமணாளன் எழுதியுள்ளார். இப்படத்திற்கு கே. வி. மகாதேவன் இசையமைக்கிறார். ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ஷனில் வளரும் எஸ். எஸ். ராஜேந்திரனின் "முத்து மண்டபம்" படத்தில் இக் காட்சியைக் காணலாம். மேற் சொன்ன காட்சி பரணியில் படமாக்கப்பட்டது.

## "பிறந்த மண்"

பூமாலை பிலிம்ஸ் என்ற புதுப் படக் கம்பெனியார் "பிறந்த மண்" என்ற படத்தை உருவாக்குகிறார்கள். இச் சமூகப் படத்தில் பல புது முகங்கள் நடிப்பார்களாம்.



முருகன் பிரதர்ஸ் ஏ. வி. எம். ஸ்டுடியோவில் தயாரித்து வரும் "வீரத்திருமகன்" படத்தில் நாட்டிய நடிகை ஈ. வி. சரோஜா அற்புதமாக நடித்து வருகிறாராம்.

## கூந்தல் கையுடன் வந்தது

### படப்பிடிப்பில் சம்பவம்

முருகன் பிரதர்ஸ் "வீரத் திருமகன்" படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

குமாரி சரஸ்வதியும் ஆனந்தனும் சம்பந்தப்பட்ட காதல் காட்சி அது. சரஸ்வதி அன்றுதான் முதன்முதலாக படப்பிடிப்புக்கு வந்திருந்தார். எனவே அவருக்குள்ளாகவே கொஞ்சம் பதட்டம் இருந்தது.

காட்சி ஆரம்பமாயிற்று.

"மலர் அங்கே..., கூந்தல் இங்கே... அதைச் சூட்டவேண்டிய கரங்கள் இங்கே..." என்று சொல்லிக்கொண்டே ஆனந்தன் சரஸ்வதியின் கூந்தலை வருடிவிட வேண்டும்.

ஒத்திகையெல்லாம் நன்றாகவே முடிந்தது.

காட்சி ஆரம்பமாயிற்று.

ஆனந்தன் வசனத்தைப்பேசிவிட்டு கூந்தலை வருடினாரோ இல்லையோ, அவருடைய கையுடன் கூந்தலின் ஒருபகுதி அப்படியே வந்துவிட்டது.

சரஸ்வதி கூந்தலைத் தடவிப்பார்த்துவிட்டு, அது காணமற்போய்விட்டதைக் கண்டு திகைக்க, அன்னநடைபோட்டபடி "மலர் அங்கே! கூந்தல் இங்கே என் கையில்!" என்று சொல்லியபடி ஆனந்தன் அதை தூக்கிப்பிடித்துக் காட்டினார்!

சரஸ்வதியின் இயற்கைக் கூந்தல் அல்ல அது. அழகுக்காக முன்புறம் பொருத்தப்பட்டிருந்த கூந்தலே அது!

## நடிகைகளுக்குப் பஞ்சமில்லை ஆனால் நடிகர்கள் தேவை

ஜெர்மனியில் டெலிவிஷன் வெகுவேகமாக முன்னேறிவருகிறது. அந்தப் போட்டியையும் சமாளித்து சினிமாத்தொழில் தலை தூக்கிவருகிறது. ஆனால் இவ்விரு துறைகளிலும் தொழில் நுணுக்க நிபுணர்கள், நடிகர்கள் போதிய அளவுக்கு இல்லை. நடிகைகளுக்குப் பஞ்சமில்லை.

இத்தனைக்கும் சினிமா, டெலிவிஷன் இவைகளில் மக்களுக்குள்ள மோகம் குறையவில்லை. அப்படியிருந்தும் தொழில் நுணுக்க சேவைகளுக்கு ஏற்படும காலி ஸ்தானங்களுக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. காமிராமேன்கள், ஸ்கிரிப்ட் பெண்கள், டெக்னீஷியர்கள், எினரியோ அமைப்பாளர்கள் ஏராளமாக இன்று தேவைப்படுகின்றனர். இப்பற்றாக் குறையை நிவர்த்திக்க சினிமா டெலிவிஷன் தயாரிப்பாளர்கள் வழிகண்டுபிடித்துவிட்டனர். நாடகக்கல்லூரிகளில் பயிற்சிபெற்றுவரும் இளைஞர்கள் நடிகர்களாகபொறுக்கி எடுக்கப்படுகிறார்கள். தொழில் நுணுக்க நிபுணர்களுக்கான பயிற்சி அளிக்கவும் பலஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடிகர்கள், தொழில் நுணுக்க நிபுணர்கள் இவர்களை தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க ஹாமபார்க்கிலுள்ள பல சினிமா கம்பெனி முதலாளிகளும் டெலிவிஷன் முதலாளிகளும் கூட்டாக ஒரு திட்

இத்துறைகளில் பயிற்சிபெற ஏராளமான மனுக்கள் வருவதால் அம் மனுக்களிலிருந்து திறமையானவர்களை மட்டும் பொறுக்கி எடுப்பது சாத்தியமாக இருக்கிறது. பயிற்சி காலத்தை 18 மாதங்களாகவே நிர்ணயித்திருக்கிறார்கள். 20 வயதுள்ள இளைஞர்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு செயல் முறைப்பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பின்னர்தான் ஏட்டுப்படிப்பு, போதிக்கப்படுகிறது. படம் தயாரிப்பதிலுள்ள ஆரம்ப கட்டம் முதல் திரையிடப்படும் கட்டம் வரையிலுள்ள எல்லா முறைகளும் பற்றிப் போதிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் மிகக் கடினமான முறையில் அமைக்கபபட்டுள்ளதால் திறமசாலிகள் மட்டுமே தலைதூக்கி முன்னுக்கு வரமுடியும்.

சினிமா, டெலிவிஷன்களைக் கண்டு ரசிப்பவர்கள் பெரும்பாலோர் 16 வயது முதல் 29 வயது வரையுள்ள தொகுப்பினர்கள்தான். இவர்கள் யுவ நடிகைகளையும் நடிகர்களையுமே படங்களில் எதிர்பார்க்கின்றனர். டெலிவிஷன் என்னதான் பிரபலமானாலும் சினிமாப்படங்களில்காணப்படும் ஒருதிருப்தி அதில் இல்லையாம். ஆகவே சினிமாப் படத்தொழில் ஒருநாளும் டெலிவிஷனால் பாதிக்கப்படமாட்டாது.

ஹாம்பர்க்கில் பின்பற்றப் படும் முறை பெர்லினிலும்

றன. பயிற்சிக் கல்லூரிகளை அரசாங்கம் அமைக்கவில்லை. சினிமா, டெலிவிஷன் அதிபர்களே ஏற்படுத்தி நடத்துகிறார்கள். படங்களின் தரத்தை உயர்த்துவதில்தான் எதிர்காலம் இருக்கிறதென்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.


மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு.

# என்ன செய்யலாம்

—"கௌரி"—

## குழந்தைக்குத் தொண்டையில் உணவு விக்கினால்.....

உங்கள் குழந்தைகள் சாப்பிடும்போது சில சமயங்களில் உணவு தொண்டைக்குள் அடைத்து அவர்கள் திக்கு முக்காட நேரிடலாம். குழந்தை மூச்சுவிடவும் இயலாது, உணவைவிழுங்கவும் இயலாது எக்கச்சக்கமாக உணவுதொண்டைக்குள் அடைத்துவிடுவதுண்டு. இந்தச் சமயத்தில் குழந்தைக்கு உதவுவதற்குத் தாயின் புத்திசாலித்தனம் தேவைப்படுகிறது. இறைச்சித்துண்டமோ அல்லது அதைப் போன்ற வேறு ஏதாவது உணவுப் பொருளோ பிள்ளைகளின் தொண்டையில் அடைக்கலாம். இல்லாவிட்டால் உணவுப் பொருளல்லாத வேறு பொருளைப் பிள்ளை விளையாட்டாக வாய்க்குள் வைத்து, அது தொண்டைக்குள் சென்று அடைக்கலாம். இத்தகைய விபத்து நேரிடும்போது குழந்தையை உடனேயே தலைகீழாகத் தூக்கிப் பிடிக்கவேண்டும். தலை ஏந்தனத்தில் கீழேதொங்கக் கூடியதாகக் கால்களில் பிடித்துத் தூக்கிக் கொண்டு முதுகில் சில தடவைகள் பலமாகத் தட்டிக்கொடுக்கவேண்டும். பிள்ளை சிறிதாக இருந்தால் தான் இப்படிச்செய்ய முடியும். சிறிது வளர்ந்த பிள்ளையாக இருந்தால், உங்கள் முழங்கால்களில் பிள்ளையின் வயிறுபதியக்கூடியதாகப் பிள்ளையை முகங்குப்புறமாகப் படுக்கவைத்துக்கொண்டு இரண்டு தோள்மூட்டுக்களுக்கிடையிலும் பலமாகத் தட்டுங்கள்.

இந்த முயற்சிகளால் பிள்ளைகளுக்கு நன்மை ஏற்படாவிட்டால் உங்களுடைய கைவிரல் ஒன்றை பிள்ளையின் தொண்டைக்குள் விட்டு இருமவைக்க வேண்டும். கைவிரலினால் அடைத்துக்கொண்ட பொருளை உள்ளுக்குத் தள்ளிவிடாதபடி கவனமாக இருக்கவேண்டும். விரலைவைத்து இருமச்செய்தால் இருமும்போது பொருளும் உடன்சேர்ந்து வெளியே வந்துவிடும்.

பிள்ளைக்குத் தொடர்ந்தும் அடைப்பு நீங்காது திக்குமுக்காடி முகத்தின் நிறம் மாறி வந்தால் சமீபத்திலுள்ள டாக்டரிடமோ ஆஸ்பத்திரியிலுள்ள அவசரசிகிச்சை நிலையத்துக்கோ எடுத்துச் செல்ல வேண்டும்.

### பிள்ளை பலமாக விழுந்துவிட்டால் . . .

பிள்ளை பலமாக விழுந்தோ, அல்லது தலையில் அடிபட்டு விடுவதாலோ பெருந்தீங்குகள் ஏற்படலாம். விழுந்துவிட்ட 15 நிமிடங்களுக்கிடையில் பிள்ளையின் தேகத்தில் எதுவித மாறுதலும் ஏற்படாமலும், குழந்தை அழுவதை நிறுத்தியும் விட்டால், விழுந்ததால் பெரும் தீங்கு எதுவும் ஏற்படவில்லை என்று பொதுவாகக் கூறிவிடலாம்.

பலமாக விழுந்து கொண்டதால் குழந்தைக்கு, வாந்தியோ தலைவலியோ, சாப்பாட்டில் விருப்பமின்மையோ சோர்வோ ஏற்பட்டுவிட்டால் உடனடியாக ஒரு டாக்டரிடம் காண்பிக்கவேண்டும். டாக்டர் X ரேயின் மூலமாகவும் வேறு எல்லா வகையிலும் பரிசோதனை செய்துபார்த்து வேண்டிய சிகிச்சை வழங்குவார். இரண்டு மூன்று நாட்களுக்குப் பிள்ளையைப் படுக்கையிலேயே வைத்திருக்கவேண்டும். விழுந்த தின இரவு அடிக்கடி பிள்ளையை எழுப்பிப் பார்த்துப் பிள்ளைமூர்ச்சையாகாது இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். விழுந்த மூன்று நாட்களிலும் பிள்ளை முந்திய நிலையைப் பெற்றுவிடாவிட்டால் திரும்பவும் டாக்டரிடம் காண்பிக்க வேண்டும். விழுந்த உடனேயே மூர்ச்சையுற்ற பிள்ளையொன்றைக் கண்டிப்பாக டாக்டரிடம் காட்ட வேண்டும்.

# மகளிர் மன்றம்

## இலக்கிய ஆர்வம் மிக்க பெண்கள்

### புத்தகம் விற்பனை செய்வது அவர்களின் பிரதான தொழில்

சகல தொழில்களிலும் சரிசம வாய்ப்புக்களைக் கோரும் மேற்கு ஜெர்மன் பெண்மணிகள் புத்தக விற்பனைத்தொழிலிலும் மிகவும் பிரதானமாக விளங்குகின்றனர். புத்தகங்களிலுள்ள விஷயங்களைப் படித்து நல்ல இலக்கிய அறிவைப் பெற்றிருப்பதுடன், புத்தகம் வாங்க வருபவர்களின் மனோநிலையையும் நன்கு அறிந்தவர்களாக விளங்குகிறார்கள்.

மேற்குஜெர்மனியில் எந்தப் புத்தகக் கடைகளுள் நுழைந்தாலும் விற்பனையைக் கவனிப்பவர்கள் பெரும்பாலும் பெண்களாக இருப்பதைக் காணலாம். புத்தகம் வாங்குபவர்கள் மனநிலை என்ன? அவர்களுக்கு எதைச் சொன்னால் திருப்தியடைந்து புத்தகம் வாங்குவார்கள் என்பதை எல்லாம் இந்த யுவதிகள் நன்கு அறிந்துள்ளனர். மேற்கு ஜெர்மனியில் இப்போது ஏற்பட்டுள்ள சமூகநிலை மாறுதல்கள் காரணமாக முன்பு ஆண்கள் மட்டுமே பார்த்துவந்த வேலைகளுக்கு இப்போது பெண்களும் நியமிக்கப்பட்டனர். முன்பு ஆரம்ப ஆசிரியர் வேலைக்குப் பெண்கள் அமர்த்தப்பட்டனர். இன்று புத்தக விற்பனைத் தொழிலில் பெரும்பாலும் பெண்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

எல்லா வயதுடைய பெண்களும் புத்தகத்தொழிலில் விரும்பி ஈடுபடுவதற்குக் காரணம் கூறுவது கஷ்டம்தான். பெண்களின் சுபாவம், மனோபாவம் இந்த வேலைக்கு அநுகூலமாக அமைந்திருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். புத்தகம் வாங்க வருபவர்களிடம் சுமுகமாக நடந்து கொளவது, அவர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் அவர்கள் கேட்டவைகளுக்குப் பதிலளிப்பது இவைகளெல்லாம் பெண்களால் தான் நன்கு இயலும். ஆனால் விற்பனையாளர்களாக மட்டுமின்றி புத்தகக்கடைகளை சொந்தமாகவும் ஜெர்மன் பெண்மணிகள் நடாத்திவருகிறார்கள். மூனிச் நகரில் 30 சதவிகித புத்தகக் கம்பெனிகளை நடாத்துவது பெண்களே.

பதிப்பிக்கும் தொழில் நிலைமை வேறாக உள்ளது. அவ்வளவாக இதில் பெண்கள் ஈடுபடுவதில்லையென்றாலும் ஒரு சிலர் இதிலும் ஈடுபட்டே வருகிறார்கள்.

ஜெர்மனியிலுள்ள பதிப்பகங்களில் பிழைபார்த்துத திருத்தும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பகுதியினர் பெண்களே. புத்தகங்களிலும் இதே நிலைமைதான். காலஞ்சென்ற தங்கள் கணவன்மார்களின் பொறுப்பை ஏற்றுச் சில பெண்மணிகள் பதிப்பகவேலையைத் தாமாகவே மேற்கொண்டு திறம்பட நடத்திவருகின்றனர். பெண்மணிகள் பொதுவாக ஆண்களைவிட அதிகமாகப் புத்தகங்கள் படிக்கின்றனர். பொதுமக்களில் எந்தெந்தப்பிரிவினர் என்ன புத்தகங்களைப் படிக்கலாம் என்பதை இவர்களே நிர்ணயித்து தீர்மானிக்கின்றனர்.

ஒரு மொழியிலிருந்து பிற மொழிகளில் புத்தகங்களை எழுதுவதற்கும் பெரும்பாலும் பெண்களே அமர்த்தப்பட்டுள்ளனர்.

## வையந் தழைக்க.....

ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்  
வதால்  
அறிவிலோங்கியிவ் வையந் தழைக்குமாம்  
பூணும் நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்  
போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம்  
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்  
ஞான நல்லறம் வீர சுதந்திரம்  
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்  
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள்  
கேட்டிரோ !

—பாரதி




### ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்திற்கு

சருமத்தின் இரகசியங்களை நவீன விஞ்ஞானம் அறிந்து வைத்திருக்கிறது. ராணி சந்தன சோப்பை உபயோகித்தீர்களானால், ரோஜா மலர் போன்றமிருதுவான சருமத்தை நீங்களும் பெறலாம். ராணி சோப்; சருமத்தை ஊடுருவிச் சுத்திகரித்து சகல அழுக்குகளையும் வெளியேற்றுகிறது. பின்னர், ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் இயற்கையானஎண்ணெய் வகைகள் மூலம், சருமத்தை மிருதுவாக்குகிறது. அழகின் இரகசியம் சருமத்தைஊடுருவிச்சுத்திகரிக்கும் சோப். ராணி, இதற்கெனவே உருவான சோப்.

இன்றே எழுதி ராணி பரிசுத் திட்டப் புத்தகத்தைப் பெறுங்கள்



## ராணி சந்தன சோப்

சுதேசி இண்டஸ்ட்ரியல் வோர்க்ஸ் லிமிட்டெட்

தபாற் பெட்டி 21, கொழும்பு

GC/8/1


# வீட்டு வைத்தியம்

**உள்ளி:-**

அதிக இரத்தஅழுத்தம் (பிளட் பிரஷர்) உள்ளவர்களும், அஜீரணத்தால் சிரமப் படுவோருக்கும் இது நல்ல கை மருந்தாகும். வேகவைத்தோ, பச்சையாகவோ உணவுடன் தாராளமாகக் கலந்து சாப்பிடலாம்.

அதிகாலையில் அல்லது பால், காப்பி இவை அருந்தும் நேரத்திலும் சிறிதளவு உள்ளி சேர்த்துக் கொள்வது நல்லது. இது இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். இரத்த அழுத்தம் குறைந்தவர்களுக்கு இது மருந்தாகாது

**வெங்காயம்:-**

வெங்காயம் என்றவுடன் முகத்தைச் சுளித்துக் கொள்வோரை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த வெங்காயத்திற்கு அநேக நோய்களை போக்கும் சக்தியுண்டு என்றால் ஆச்சரியப்படுவீர்கள்.

இரண்டு வெங்காயத்தை தண்ணீரில் வேகவைத்து எடுத்து தட்டியோ, அரைத்தோ சூடாகப் பாலில் கலந்து சாப்பிட்டால், தூக்கம் வரவில்லை என்று அங்கலாய்ப்பவர்களுக்கு நல்ல மருந்தாகும்.

பச்சடியில் பச்சை வெங்காயத்தைச் சேர்த்துச் சாப்பிட்டால்சளி, மூக்கடைப்பு முதலியவற்றைக் கண்டிக்கும். ஆஸ்த்மாவுக்கும் நல்லது.

தலைமயிர் கொட்டிப் போனவர்களுக்கும் வியாதியால் கேசத்தை இழந்தவர்களுக்கும் தினமும் வெங்காயத்தை பச்சையாக சாப்பாட்டில் சேர்த்துக் கொண்டால் பழையபடி கேசத்தைப் பெறுவதுடன் பளபளப்பையும் மென்மையையும் கூடப் பெறலாம்.

**தேன்:-**

அதியற்புதமான கைமருந்து தேன். அநேகமாக எல்லா வீடுகளிலும் இருக்கமாட்டாது. ஆனால் கண்டபடி மருந்துக்குச் செலவு செய்பவர்கள் தேனை வாங்கி வீட்டில் வைத்திருந்தால் டாக்டர் உடன் இருப்பது போலாகும். என்ன விதமான வியாதியாக இருந்தாலும் தேன் உபயோகத்திற்கு வரும்.

இரத்த அழுத்தம், இருதய நோய் கண்டவர்கள் தூக்கமில்லாதவர்கள் தேனை நல்ல மருந்தாகப் பாவிக்கலாம்.

பல் முளைக்கும் சின்னக் குழந்தைகளுக்கு முரசில் சிறிது தேனைத் தடவி வந்தால் பல் முளைப்பது சுலபமாக இருக்கும். நோ, வலி ஒன்றுமே தோன்றாது.

அஜீரணத்தால் அவதிப்படுவோர் எலுமிச்சம்பழச் சாற்றுடன் 1—4 தேக்கரண்டி பை கார்பனேட்டை அப்பசோடா கலந்து ஒரு கிளாஸ் நீரில் கலக்கிச்சாப்பிட்டால் போதும்.

—சுந்தரி சபாரத்தினம்

### பெண்ணின் பெருமை

ஒரு பெண்ணே தாயாகவும், சகோதரியாகவும், புதல்வியாகவும், மனைவியாகவும் விளங்கப் பெறுகின்றாள். என்னே இவளின் பெருமை!

### கணவர் கஷ்டம்!

"செல்வந்தர் வீட்டுப் பெண்கள் போன்று வறியவர் வீட்டுப் பெண்கள் தாமும் அங்ஙனமாகிவிடலாமென எண்ணுவரேல் அவர்களைக் கைக்கொண்டவரான கணவர்களுக்கு வேறு நரகம் இருக்கமுடியாது".

# நாடு நலம் பெற . . .

## ஒரு நாள் வயதான கோழிக்குஞ்சுகளை வீட்டில் பராமரித்தல்

**இலங்கை முழுவதிலும் கோழி வளர்ப்புத் தொழில் பல்கிப் பெருகிவருவது வீடு செழிக்க, நாடு நலம் பெறவும் நன்மை பெருகவும் நல்ல அறிகுறியாகும். குறைந்த முதலில் நல்ல லாபத்தைப் பெறக்கூடியதும் இளைஞரும் முதியோரும், பெண்களும் ஆண்களும் மேற்கொள்ளக்கூடியதுமான முயற்சி இது. இலாபம் தரும் இத்தொழிலில் ஈடுபடும் பலரும் ஒருநாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளைக் கொள்வனவு செய்து தமது கோழிவளர்ப்புத் தொழிலை விருத்தி செய்கின்றனர். அவர்களுக்கு இக்கட்டுரை உபயோகமானது.**

ஒருநாள் வயதான கோழிக் குஞ்சுகளின், ஒரு கூட்டத்தைக் கொள்வனவு செய்யும்பொழுது அக்கூட்டத்தில் 50 சதவீத சேவற் குஞ்சுகளும், 50 சதவீத பேட்டுக் குஞ்சுகளும் இருக்கக்கூடும். குஞ்சுகள் பருவமடையுமுன் பராமரிப்புத் தராதரத்திற்கேற்றவாறு, பிரதானமாய் குளிரால் தாக்கப்படாமல் அளிக்கப்படும் கவனத்திற்குத் தக்கதாக 5—30 சதவீதக் குஞ்சுகள் மரித்தல் இயல்பு. அன்றியும் சீரான உறுப்புகளற்ற குஞ்சுகளும், பலமற்ற குஞ்சுகளுமிருக்குமாகையால் அவற்றைப் பட்டியிலிருந்து அகற்றுவதற்கும் தயாராகவிருத்தல் வேண்டும். நாளடைவில் முட்டையிடும் 10 பேடுகளை வளர்க்க விரும்புவோர் பால் வகுப்பறியாத 30 ஒருநாள் வயதுடைய குஞ்சுகளைக் கொள்வனவு செய்தல் நலம்.

கொள்வனவுசெய்த ஒருநாள் வயதுடைய குஞ்சுகளை அடைக்கோழியுடன் விடலாம். அல்லது குஞ்சுக் கூடுகளில் விட்டு செயற்கை முறையிற் பராமரிக்கலாம்.

### அடைக்கோழியுடன் விடுதல்

ஒருநாள் வயதுடைய கொள்வனவுக் குஞ்சுகளை அடைக்கோழியுடன் விட்டு, அக்கோழி அடைகாத்த முட்டைகளிலிருந்து உற்பத்தியான குஞ்சுகளை, எவ்வண்ணம் காக்குமோ அவ்வண்ணம் காக்கப் பழக்கலாம். நடுத்தரப்பருப்பமுடைய ஒரு பேடு சுமார் 15 குஞ்சுகளைப் பராமரிக்கும். அடைக்கோழி வசதிப்படுமிடத்து அது குஞ்சு பொரிக்க வைக்கப்பட்டுள்ள முட்டைகளைக் காப்பதுபோலக் கருதி, 2-3 மலட்டு முட்டைகளை அதன் கீழ் வைத்தல் வேண்டும். இரவு வேளையில் இம்முட்டைகளை உணவுக்கு உபயோகித்தற்காக எடுத்துக்கொண்டு வேறு மலட்டு முட்டைகளை வைப்பதால் முட்டைகள் வீண்போகாமல் உபயோகமடையும். கொள்வனவு செய்யப்படும் குஞ்சுகள் வந்துசேரும் வரை மேற்கண்ட வண்ணம் அடைக்கோழியை அடைத் தன்மையோடு தேவையான காலத்திற்கு இருக்கச்செய்யலாம்.

மேற்கண்டவாறு அடைக் கோழியைப் பழக்கி வருங் காலத்தில் அக்கோழி மெய்யாகவே பொரிக்க வைத்த முட்டைகளை அடைகாக்கின்றதென நினைத்து இதைச் செவ்வனே பராமரித்தல்வேண்டும். ஏழு நாட்களுக்கு இப்படியாகப் பழகியபின் அடைக்கோழி குஞ்சுகளை வரவேற்கத் தயாராயிருக்கும். சிலசமயங்களில் 2 அல்லது 3 தினங்களுக்குப் பழகிய பின்னர் குஞ்சுகளைப் பாதுகாக்க விடக்கூடியதாயிருக்கும்.

கொள்வனவு செய்யப்படும் குஞ்சுகள் வந்துசேரும் தினத்தில், இராவேளையில் அக்கோழியின் இறகுகளுக்குக் கீழ் இரண்டு அல்லது மூன்று குஞ்சுகளை முதலில் வைத்தல் வேண்டும். சாதாரணமாக இவை மனப்பூர்வமாக வரவேற்கப்படும். இதன்பின் முட்டைகளை வெளியே எடுத்துக்கொண்டு மற்றைய குஞ்சுகளையும் அடைக்கோழியுடன் விடுதல் வேண்டும். பின்னர் அடைக்கோழிக்குத் தானிய உணவு அளித்து, தாய்க்கும் குஞ்சுகளுக்கும் வசதிப்படக் கூடியதாய் நீர் வைத்தல் வேண்டும். குஞ்சுகள் 6 வாரப் பருவமடைந்தபின் தாயை விட்டுப் பிரியக்கூடியதாயிருக்கும்.

### கூடுகளில் செயற்கை முறையிற் பராமரித்தல்

அடைக்கூட்டினுள்ளே போதிய வெப்பமும், காற்றோட்டமுமிருக்கச் செய்தலும், கூட்டை இலகுவில் சுத்தஞ் செய்யக்கூடியதாய் அமைத்தலுமே கூட்டின் விசேட தன்மைகளாயிருத்தல் வேண்டும். மரணத்தை விளைக்கும் சீதளம், குளிர்காற்றினலுண்டாகுமாகையால் குஞ்சுகளின் இறகுகள் நன்கு விருத்தியாகும் வரைகுஞ்சுகளைப் பராமரித்தல் வேண்டும். அதே சமயத்தில் போதிய காற்றோட்டமும் அவசியமாகும். குஞ்சின் உடலில் அனற் பதனளவு அதிகமாகையாலும், குஞ்சு வேகமாய்ச் சுவாசிக்கும் தன்மையுடையதாகையாலும் அதற்கு நற்காற்று போதியளவு தேவையாகும். காற்றோட்டம் திருப்திகரமற்ற கூடுகளில் பெருந்தொகையில் குஞ்சுகளை அடைக்கும்பொழுது அவற்றின் உடல் வலிமை சுருங்கும். அதனல் மரணவீதம் அதிகரிக்கும். சடுதியாய்க் காற்றுவிழாத வெப்ப அறையில் அடைகூடு வைக்கப்படக்கூடிய வசதியிருப்பின் செயற்கை முறையில் வெப்பமுண்டாகச் செய்யும் ஒழுங்குகள் இல்லாமல், ஓர் மரப்பெட்டியில், அல்லது அட்டைத்தாள்ப் பெட்டியில் சிறு கூட்டமான 30 குஞ்சுகளை அடைத்து வளர்க்கலாம். பெட்டியின் உட்பக்கமெங்கும் ஓர் சட்டத்தில் பழைய மிருதுவான கம்பளத் துண்டுகளைத் தொங்கவிடுதல் வேண்டும். துண்டின் விளிம்புகளில் குஞ்சுகள் ஒன்றுசேர்ந்து விளையாடும். மேற்பக்கத்துக்கூடாக பெட்டிக்குள் காற்றோட்டம் உண்டாகக்கூடியதாய் மெல்லிய துணியால் மேற்பக்கத்தை மூடுதல் வேண்டும். பெட்டியின் நான்கு பக்கங்களிலும் காற்றோட்டத்திற்காகத் துளைகள் பல அவசியமாகும்.

குளிர்காலத்தில், அல்லது பாதுகாப்பற்ற அறையில் மலிவான விளக்குகளை உபயோகிக்கலாம். மின்சார வெளிச்சமுள்ள இடத்தில் பெட்டியிலுள்ள இளங் குஞ்சுகளுக்கு வெப்பங் கிடைப்பதற்காக மின்சாரக் குமிழ்களை உபயோகிக்கலாம். மேலதிகமான வெப்பம் குஞ்சுகள் சீதளத்தினற் பாதிக்கப்படுவதற்கு மூலகாரணமாகக்கூடும். ஆகவே பெட்டியில் அதிக வெப்பம் உண்டாகச் செய்தல்கூடாது.

பொதுவாக இலங்கையின் பள்ளப் பிரதேசத்தில் முதற் பதினன்கு நாட்களுக்குமே செயற்கை முறையிலுண்டாக்கப்படும் வெப்பம் குஞ்சுகளுக்குத் தேவையாகும். முதல் ஏழு நாட்களிலும் பகலிலும் இரவிலும் வெப்பமுண்டாகச் செய்தல் வேண்டும். அடுத்த ஏழு நாட்களிலும் இரவில் மட்டும் இது தேவையாகும். வெப்பமும், பிரகாசமும் பொருந்திய சுவாத்திய சாதனமிருப்பினும், குஞ்சுகளின் நெஞ்சுறுப்பு ஈரப்பயிரிற் படாதிருப்பினும் மூன்ரும் நாட் தொடக்கம் குஞ்சுகளைத் தோட்டத்தில் உலாவவிடலாம். வெவ்வேறு இடங்களில் வைக்கக்கூடிய இரும்பு வலையடைப்பில் அல்லது ஏதாவதொரு அடைப்பில், காகம், பூனை, நாய் முதலியன பிடிக்காவண்ணம் குஞ்சுகளை அடைத்தல் வேண்டும்.

குஞ்சுகள் 6 வாரப் பருவமடையும்வரை மந்தாரமும், குளிரும் உண்டாகும் வேளைகளில் மேற்கண்ட அடைப்பிலிருந்து குஞ்சுகளை விலக்கி அடைகூட்டிலிருக்க விடுதல் வேண்டும். அன்றேல் அவை சீதளநோயினல் பாதிக்கப்படக்கூடும்.

### அடைகூட்டின் அளவு

பெட்டியில் பெருந்தொகையில் குஞ்சுகளை அடைத்தலால் வளர்ச்சியும், இறகு உற்பத்தியும் சுருங்கும். இறகு பிடுங்குந் தன்மையும் கொத்துந் தன்மையும் உண்டாகும். நிலவிசாலம் 4 சதுரஅடி கொண்ட பெட்டியில் அடைக்கக்கூடிய தொகை விபரங்கள் இங்கே கூறப்படுகின்றன:—

| குஞ்சுகளின் வயது | | அடைத்தற்கேற்ற குஞ்சுகளின் தொகை |
|---|---|---|
| 1 நாள் — 3 வாரம் | ... | 30 குஞ்சுகள் |
| 3 வாரம் — 6 வாரம் | ... | 15 குஞ்சுகள் |
| 6 வாரம் — 8 வாரம் | ... | 8 குஞ்சுகள் |

### சுகாதாரம்

இயன்றளவு அடிக்கடி கூடு சுத்தஞ் செய்யப்படுதல் வேண்டும். குறைந்த பட்சம் தினசரி ஒரு வேளையிலாவது சுத்தஞ் செய்தல் வேண்டும். கூட்டில் குஞ்சுகள் நிற்குமிடம் கம்பிவலையினல் செய்யப்படாவிடத்து பழைய புதினப் பத்திரிகைத் தாள்களை நிலத்தின் மேல் உபயோகிக்கலாம். அதனல் நிலத்தைச் சுத்தப்படுத்தல் சுலபமாகும்.

### குஞ்சுகளுக்கு உணவூட்டல்

அரிசிக் குறுணல் அல்லது மறுதானியக் குறுணல் (இறுங்கு, சோளம், குரக்கன்) முதல் வாரத்தில் குஞ்சுகளுக்கு அளிக்கப்படலாம். மாத்தின் எதுவும் கொடுக்கக் கூடாது. பால் சில சமயங்களிலாவது கொடுத்தல் நலம். மூன்ரும் நாட்தொடக்கம் குஞ்சுகள் கொத்தக் கூடிய பசும்புல் ஒரு பிடி தொங்கக் கட்டப்படுதல் வேண்டும்.

இரண்டாம் வாரம் தொடக்கம் எட்டாம் வாரம்வரை நாள் முழுமையும் குஞ்சுகளுக்கு வசதிப்படக் கூடியதாய் கீழ்க்காணும் விகிதப்படி ஈரமற்ற உணவுக் குழையல் தயாரித்து அளித்தல் வேண்டும்:

தானியக்குறுணல் (மாஅல்ல) குரக்கன், அரிசி, இறுங்கு அல்லது பிற 80 சதவீதம்.

வசதிப்படும் தவிடு 10 சதவீதம்.

மீன்தூள், அல்லது பொடியாக்கிய நெத்தலி, அல்லது மறு கருவாட்டு வகை 10 சதவீதம்.

### முக்கிய குறிப்பு

கருவாட்டில் அதிக உப்புக் காணப்பட்டால் கழுவிஅதைக் குறைத்த பின்னர் கருவாட்டைத் திரும்பவும் காய வைத்துப் பொடியாக்குதல் வேண்டும். கருவாட்டில் உப்பில்லாவிட்டால் ஒரு சதவீதம் உப்பு உணவுக் கலவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட உணவுக் கலவையுடன் மிகச் சிறிதாய்த் துண்டாடப்பட்ட பச்சைக் குழைகள் (கங்குங், வல்லாரை, பொன்னுங்காணி, பசும்புல் முதலியன) பருமன் அளவுப்படி 2 பாகக் கலவைக்கு ஒரு பாகக் குழை வீதம் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இருவகைப் பொருள்களும் செவ்வனே கலக்கப்படல் வேண்டும்

தானியக் குறுணலில் அரை மணித்தியாலத்திற்கு குஞ்சுகள் எவ்வளவு உண்ண முடியுமோ அவ்வளவும் சாயங்காலம் அளிக்கப்படுதல் வேண்டும்.

சில சமயங்களில் பால் அளிக்கப்படுதலால் குஞ்சுகள் மேலும்விருத்தியடையும். விரும்பினல் ஈரமற்ற கலவைக்குப் பதிலாக அதே உணவை ஈரமாய்க் குழைத்து தினசரி 4 வேளைகளில் ஊட்டலாம். அரை மணித்தியாலத்திற்கு உண்ணப் போதிய உணவை ஒவ்வொரு வேளையிலும் அளித்தல் வேண்டும்.

போதிய பால் அல்லது தண்ணீர் ஊற்றி உணவை ஈரமானதாயும், உதிரக்கூடியதாயும் குழைத்தல் வேண்டும். மீன் குடலகள், இறைச்சிக் கழிவுகள் ஆகியவற்றை 4 வாரப் பருவத்திற்கு மேற்பட்ட குஞ்சுகளுக்கு அளித்தல் நலம். நஞ்சுஊறிய உணவினல் கோழிகள் சுலபமாய் அபாயமடையுமாகையால் அழுகிய மாமிசத்தை அவற்றிற்கு உபயோகிக்கக்கூடாது.

உணவு வட்டில்களும், நீர்க் கிண்ணங்களும் குஞ்சுகளால் அசுத்தப்படுத்தப் படாமலும், புரட்டப்படாமலுமிருக்கக் கூடியதாய்ச்செய்யப்படுதல் வேண்டும்.

### வளர் கோழிகளுக்கும் முதிர்ந்தகோழிகளுக்கும் உணவூட்டல்

குஞ்சுகள் 8 வாரப் பருவமடைந்தபின் சமையலறையிலும், சாப்பாட்டறையிலுமிருந்து கழிக்கப்படும் உணவுப் பொருள்களை உண்ணச்செய்தல் வேண்டும். சேவல்களுக்குப் பிழிந்த தேங்காய்ப்பூவை அளவின்றிக் கொடுக்கலாம். பேடுகளுக்கும் தேங்காய்க் கழிவுகளை ஓர் அளவுக்கு அளிக்கலாம். அதிகம் கொடுத்தால் அவை மிகக் கொழுத்து முட்டையிடுதலில் அபகீர்த்தியடையும். சமையலறை, சாப்பாட்டறைக் கழிவுபொருள்களுடன் வசதிப்படும் தானியங்களை (குரக்கன், இறுங்கு, அரிசிக் குறுணல் போன்றவற்றை) அளித்தல் அவசியமாகும்.

### பசுந்தளைகள்

எவ்வளவு பசுந்தாள்களை உண்ணுகின்றனவோ அவ்வளவுக்குத் தகுந்த பலனுண்டு. இலை, குழைகளைத் துண்டாடி மற்றைய உணவுப் பொருள்களுடன் கலத்தல்வேண்டும்.

வீட்டுக் கழிவுப் பொருள்களிலிருந்து கோழிகளுக்கு மஸ்துச் சத்து அதிகம் கிடைக்காதாயின் தினமும் 10 கோழிகளுக்கு 3 அவுன்ஸ் வீதம் மீன் தூள் அல்லது பொடியாக்கபபட்ட கருவாடு மற்றைய உணவுகளுடன் கலத்தல் அவசியமாகும். தானியக் குறுணலுடன் மீன் தூளைக் கலக்கலாம். சிதம்பிய அல்

(11ம் பக்கம் பார்க்க)

## பயிர்களுக்கு உரம் இடுகிறீர்களா?

### அப்படியானல் அவசியம் தெரிந்து கொள்ளுங்கள்

**இன்றைய விவசாயிகள் பயிர்களுக்கு விஞ்ஞான முறையான உரங்களைப் பயன் படுத்த ஆரம்பித்திருக்கின்றனர். அவைகள் அளவறிந்து சரியானபடி உபயோகிக்கப் படாவிடில் நஷ்டமாகவே இருக்கும். மண்வளத்துக்கேற்ப பயிர்களுக்குச் சீரான ஊட்டம் அளிக்கப்பட வேண்டும்; நைட்ரஜன் மட்டும் இவற்றிற்குப் போதாது. இவற்றைப் பயன் படுத்தும் அடிப்படை அறிவை ஒவ்வொரு கமக்காரரும் தெரிந்து கொள்வது நன்று.**

அமோனியம் சல்பேட்டைப் போடுவதால் உடனடியான பலன் கிடைப்பதைக் கண்டு கொண்டு விவசாயிகள் பயிர்களுக்கு தொடர்ந்து இந்த உரத்தையே போடுகிருர்கள். அமோனியம் சல்பேட்டை இடுவதால் பயிர் அதிகப்படியான பாஸ்பர அமிலம், பொட்டாஷ் இரண்டையும் நிலத்தினின்று எடுத்துக் கொள்கிறது என்று தெரிவதில்லை.

அமோனியம் சல்பேட்டைப் போடுவதால் அதிகப்படியாக நிலம் பாஸ்பரம், பொட்டாஷ் இரண்டையும் இழக்கும் காரணத்தால் மகசூல் குன்றத் தொடங்கும். தொடர்ந்து அமோனியம் சல்பேட்டைச் சிறியளவில் போடுவதால் கூட பயிர் தழைகளை அதிகமாக விட்டுச் சாய்ந்து போவதைக் கவனிக்கலாம். ஆகையால் பயிர்களுக்குச் சீராக உரங்களைப் போட வேண்டும். அமோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் இரண்டையும் பயிர்களுக்கு இடவேண்டும். அவசியமானல் பொட்டாஷ் உரங்களைப் போட வேண்டும். நிலத்தின் மண்ணைச் சோதனை செய்வித்துப் பார்த்தால் பொட்டாஷியம் தேவையா, தேவையில்லையா என்று தெரியவரும்.

### சூப்பர் பாஸ்பேட் இடும் விதம்

பயிர்களுக்கு சூப்பர் பாஸ்பேட்டை வேர்மண்டலத்துக்கு அருகில் போட வேண்டும். மண்ணில் சூப்பர் பாஸ்பேட் விரைவில் பிடித்துக் கொள்கிறது. அதாவது பயிர் கிரகிக்கக்கூடிய வடிவங்களுக்கு அது விரைவில் மாறிவிடுகிறது. ஆகையால் தான் வேர் மண்டலத்துக்கு அருகில் இதைப்போட வேண்டும். கலப்பைக்குப் பின்னல் உரத்தை சால்களுக்கு அடியில் போட்டுக் கொண்டே போகவேண்டும்.

வரிசையாக நடப்படும் பயிர்கள் விஷயத்தில் வேர்கள் உரத்தைக் கிரகித்துக் கொள்ளக் கூடிய தூரத்தில் அதை விதைகளிடமிருந்தோ, செடிகளிடமிருந்தோ வைத்தால் உரம் விரைவில் பயிரால் எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளப் படுகிறது.

ஈழப்பாட்டனின் கடிதங்கள்

# இலங்கையின் புதிய அரசியல் திட்டம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தருவித்து இலங்கை எங்கிலுமுள்ள முக்கிய பகுதிகளில் நிலைநாட்டி வைத்திருந்தனர், ஆங்கிலேய அரசாங்கத்தினர். தேசிய இன விடுதலை இயக்கம் முழுமூச்சுடன் முன்னேறி வந்தது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழர் சார்பில் அரசியல் உரிமைப் போராட்டத்தை அப்போது நடத்தி வந்தது.

ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஈ. எம். வி. நாகநாதன், ஜி. ஆர். மோதா, எஸ். தொண்டமான், எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் காங்கிரஸ் பிரமுகர்கள்பலருள் பிரபல்யமானவர்களாய் இருந்தனர். ஐம்பதுக்கு: ஐம்பது (50 : 50) அவர்களின் அன்றைய ஆரவாரம். அதற்குக் குறைந்த எந்தவித மத்தியஸ்தப் பேச்சுவார்த்தைகளுக்கோ, வேண்டுகோள்களுக்கோ அவர்கள் செவிசாய்க்கத் திட்டவட்டமாய் மறுத்து விட்டனர். அந்த வேளையில் நான் ஒலிவரின் உதவியுடன் டி. எஸ். சேனநாயக்காவோடு பிரச்சினையின் பல்வேறு அம்சங்களைப் பலமுறை விவாதித்தேன். பலகோணங்களிலிருந்தும் ஆராய்ந்து பார்த்தோம். ஈற்றில் இரு பகுதிக்கும் நீதியான ஐம்பத்தைந்துக்கு : நாற்பத்தைந்து (55 : 45) என்னும் எமது நடுமத்தியமான கொள்கையை டி. எஸ். மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். அந்த "அரசியல் அன்பளிப்பை" காங்கிரஸ் தலைவர்கள் "காறியுமிழ்ந்து காலால் உதைத்து" நிந்தித்தனர். நிராகரித்து ஏற்கமறுத்தனர். ஐம்பதுக்கு: ஐம்பது என்ற அன்றைய அரசியல் கோஷம் எம் பெரும் தமிழ் இனத்துக்கே என்றும் ஒருபெருந்தோஷமாய் நடந்த கதையில் இதுவுமோர் பகுதியாகும்.

"ஐம்பதுக்கு : ஐம்பது, அல்லது, சிங்களவரோடு சேர்ந்து வாழச் சம்மதமில்லை, சிங்களவருக்கு ஆதரவுகொடுக்கஆயத்தமில்லை, சிங்களவருடன் ஒற்றுமையாய் வாழ்வது ஒருபோதுமல்லை" - இதுவே, அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் அன்றைய ஆணித்தரமான ஏககுரலாக எங்கும் எதிரொலித்தது.

## சிங்கள மகாசபை

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பிரதிரூபம்தான் சிங்கள மகாசபை. அதன் கர்த்தாவான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களவர் மத்தியில் இனத்துவேஷத்தை விதைத்துக் கிளறித் தூண்டி, தூபமிட்டு அந்த அரசியல் கட்சியை வளர்த்தார். சிங்கள மகாசபைத் தலைவரும், தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் இலங்கையின் இரண்டு தலைசிறந்த சமூகத் துவேஷப் பிரசார தீரர்கள்என்றும், சந்தர்ப்பத்திற்கேற்ப நடிக்கும் தற்புகழ்விரும்பும் சுயநலஅரசியல்வாதிகள் என்றும்,அந்தநாளில் கீர்த்தியும் மேன்மையும் மிக்க பெருமகனை கொழும்பு டாக்டர் ஈ. வி. இரத்தினம் அவர்கள் பத்திரிகை வாயிலாக அச்சமின்றி எழுதிவெளியிட்டிருந்தார். அன்னாரின் அபிப்பிராய வெளியீடு அந்தத்தலைவர்கள் இருவருக்கும் தகுந்தவோர் தண்டனையாகும். அவர்களைப் பற்றிய அந்த முறையான வரைவிலக்கணம் அந்த வேளையில் மிகவும் பொருத்தமும் திருத்தமுமானதாகவேயிருந்தது.

அருணாசலம் மகாதேவா உள்நாட்டு மந்திரியாக டி. எஸ். சேனநாயக்காவின் "ஓரின (சிங்கள) மந்திரிகுழு" (ஹோமோஜினஸ் போட் ஒவ் மினிஸ்டேர்ஸ்) வில் சேர்க்கப் பட்டுவிட்டார். "ஓரின (சிங்கள) மந்திரி குழு என்னும் இந்த "அரசியல் சூக்குமம்", "கணித ஞானம்" என்னும் தகப்பனுக்கும் "அரசியல் விவேகம்" என்னும் தாய்க்கும் பிறந்தவோர் பிள்ளையாகும். இந்த நுண்மதியூகம் யாருடையது என்று எண்ணுகின்றீர்கள்? டி. எஸ். சேனநாயக்காவின் பிரதம ஆலோசகரும், புத்திபோதனையாளரும், நண்பருமாக அந்நாளில் இருந்து வந்த உங்கள் அப்பாவுடையதுவேதான். அந்தநாளில் டி. எஸ். சேனநாயக்காவின் பெயரிலோ, மந்திரிமார்குழுவின் பேரிலோ வெளியாகும் எந்த அரசியல் விசேடக்குறிப்பு விபரப்பத்திரமும், முக்கியமாக என்னுடைய சிந்தனையும், ஆலோசனையும், வேலையுமாகும். ஐவர் ஜென்னிங்ஸ் உதவி உள்நாட்டு அரசியல் விவகார அதிகாரியானதுடன் டி. எஸ். சேனநாயக்காவுக்கு ஆலோசகராயும், வழிகாட்டியாயும் நானிருந்துவந்த இடத்தையும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார் அதன் பின் எனக்குப் பதிலாக ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களேதான் டி. எஸ். சேனநாயக்காவுக்கு ஆகவேண்டிய ஆலோசனைகளையும், வழிதுறைகளையும் சொல்லிக் காட்டிவந்தார். ஆனால், அவர் தனித்தல்ல, இன்னும் பல படிப்பாளிகள் சேர்ந்தே செய்யவேண்டியிருந்தது. இந்த விடயங்களிலெல்லாம் ஒலிவர் குணத்திலக்கா மிகவும் உன்னதமான ஊக்கமான முறையில் உள்வேலைகளைப் பார்த்து நிலைமையை நேர்சீராகக் கொண்டு செல்ல எவ்வளவோ உதவிகளை உவப்போடு செய்துவந்தார்.

## 1943-ல் அபேட்சகர்

1943-ம் ஆண்டு மன்னார்-வவனியா முல்லைத்தீவுத் தொகுதிக்கு சட்டசபை அங்கத்தவர் தெரிவுக்கு நான் ஒரு அபேட்சகராக முன்வந்தேன். என்னை எதிர்த்து அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்காரர் போட்டியிட்டனர். டி. எஸ். சேனநாயக்காவின் விசேடவேண்டுகோளுக்கிணங்க டட்லி சேனநாயககாவும், காலஞ்சென்ற சிறீபால சமரக்கொடியும் இன்னும் பல சிங்களச் சீமான்களும் எனக்கு ஆதரவு திரட்டித்தர நேரில்வந்து வவனியாவில் பிரசாரம் செய்தனர். சிங்கள வாக்காளர்கள் என்னைப் பரிபூரணமாக ஆதரித்தனர். முடிவில் காங்கிரஸ் வென்றது. நான் தோற்றேன். காங்கிரஸ் எப்படி வென்றது தெரியுமா? "காசும்கவசமும்,கபடநாடகமும்" பேசும் புழுகும் கூடியே தேர்தலில் வெற்றியீட்டினர். எது என்னமாதிரியோ, காரியமில்லை. இத்தேர்தல் வெற்றி தோல்வியில் வேறுமோர் அம்சம் உண்டு. அதிலோர் பெரிய உண்மையும், பெறுபேறான பாடமும் அடங்கிக்கிடந்தது. அதாவது: "விதிமுறைப்படி நோக்குமிடத்து, ஐம்பதுக்கு: ஐம்பது வெற்றியீட்டியது; ஐம்பத்தைந்துக்கு : நாற்பத்தைந்து தோல்வியுற்றது." இது ஜனநாயக தத்துவக்கொள்கையடிப்படையிலமைந்த தீர்ப்பாதலின் தோல்வியை நான் ஏற்றுக் கொண்டேன். மேலதிகமான தமிழ் வாக்காளர் நிறைந்த தமிழ்த் தொகுதியின் அன்றைய தீர்ப்பு அதுவேயாகும்! ஜனநாயகத்தில் அசையாத நம்பிக்கை எப்போதும் எனக்குண்டு. மக்கள் தீர்ப்பை நல்வழிப்படுத்தப் பணிவுடன் பாடுபட்டுழைப்பதே என் வேலையாகும். அது என் கடமையும், தர்மமும் ஆகும்.

இந்த வேளையில் ஜே. ஆர். ஜயவர்த்தன சட்டசபையில் ஒரு பிரேரணையை முதன்முதலாகக் கொண்டுவந்தார். சிங்கள மொழியும் "கூட" அதாவது, "கூட" என்பது ஆங்கிலத்துடன் கூட இலங்கையின் அரசாங்கமொழியாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்று உரிமைகோரும் பிரேரணையாகும்.

## இடைத்தேர்தல்

1944-ம்ஆண்டு சட்டசபைக்கு இரண்டாவது இடைத்தேர்தல் மன்னார் - வவனியா - முல்லைத்தீவுத்தொகுதியில் வந்துவிட்டது. தேர்தல் அமளிதுமளியான நேரம். எனது தேர்தல் பிரச்சாரத்தை திடீரென இடையில் நிற்பாட்டிவிட்டுக்கொழும்புக்கு விரைந்து செல்லவேண்டிய சங்கடமான நிலைமை ஏற்பட்டது. அதுதான் ஜே. ஆர். ஜயவர்த்தன, சட்டசபையில், "சிங்களமும் 'கூட'" என்ற அரசாங்கமொழிப் பிரேரணையை முதன்முதலாக விவாதத்திற்குக கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்க சந்தர்ப்பம். நேரில் சென்றேன். ஜயவர்த்தனவோடும் டி. எஸ். சேனநாயக்காவோடும், சம்பந்தப்பட்ட ஏனைய பிரமுகர்களோடும் கலந்துரையாடினேன். எங்கெங்கே "சிங்களமும் கூட" என்று எழுதப்பட்டிருந்ததோ அந்தந்த இடத்திலே "சிங்களமும், தமிழும் கூட" என்று தமிழுக்குரிய இடத்தைக் கொடுக்கும்படி வற்புறுத்தி அவ்வண்ணம் செய்வித்து மீண்டேன். தமிழுக்குரிய இடத்தைப் பெற்றுக்கொடுப்பதில் சிங்களவரோடுவாதாடி வெற்றியீட்டிய என்னை, தமிழர் தொகுதியில் தமிழ்ப்பெருமக்கள் மறுபடியும் தோற்கடித்தனர். தோல்வியிலும் நன்மை அடையும் தன்மை என்னிடம் இயல்பாகவே அமைந்துள்ளது!

## அரசியல்உபாயம்

இந்தக் காலத்தில் தான் இலங்கையில் சிறுபான்மையினருக்கு வாக்குப்பலத்தை அதிகரிக்கும் ஓர் உபாயத்தைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. விசேடமாக இலங்கைத் தமிழ் சிறுபான்மையினருக்காகவே இந்த வாக்குபபலம் கொடுக்கும் முறை அநுமானிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இனத்துவேஷமோ அல்லது இனப்பட்சபாதமோ உள்ளதோர் வாக்குப் பல முறையாகத் தோற்றும்படிக்கோ அன்றி மற்றையோர் அவ்வண்ணம் ஊகிக்கும்படிக்கோ நாம் இடம் விடவில்லை. இதற்கோர் அரசியல் பரிகாரத்தை அதாவது வழிமுறையை நான் கண்டுபிடித்தேன். "சனத்தொகையும் - நிலப்பரப்பும் சம்பந்தப்பட்ட அங்கத்துவம்" என்னும் அரசியல் உபாயம் அதுவாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே தமிழ்மக்களின் சனத்தொகையின் அடிப்படையில் அவர்களுக்கு அதிகமான தொகுதிகள் இருக்கமுடியாது. ஆகவே, நிலப்பரப்பின் அடிப்படையில் தான் தமிழ்ப் பிரதேசத் தொகுதிகளை மதிப்பெடுக்கவேண்டுமென நான் ஆலோசனை கூறினேன். நியாய புத்தியுடன் வாதாடியதன் பேரில் தமிழர்களின் தொகுதிகள் வடக்கு, கிழக்குமாகாணங்களில் அவர்களின் சனத்தொகைக்கு இருக்கவேண்டியதிலும் கூடுதலாக அதிகமாக்கப்பட்டன.

## புதிய அரசியல் திட்டம்

இலங்கை அரசியல் திட்டதைத பிரித்தானிய ஐக்கிய (மாட்சிமைதங்கிய மன்னரின்) அரசாங்கத்தினால் பரிசீலனை செய்யப்படுவதற்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இலங்கை மந்திரிமார் விபரக்குறிப்பு விமர்சனமும் (மினிஸ்டேர்ஸ் மெமோரண்டம்) இலங்கை அரசியல் திட்டநகலும் சட்டசபைக் கட்டளைக் குறிப்புகளும் இதற்கெனத் தயாரிக்கபபட்டன. நடைமுறையிலிருந்து வந்த அரசியல் திட்டத்தைச் சீர்திருத்தியமைப்பது பற்றிய தமது கொள்கை அபிப்பிராயங்களை உள்ளடக்கியிருந்தது மந்திரிமார் விபரக்குறிப்பு விமர்சனம். அரசியல் நகல் திட்டத்தில் பார்லிமெண்ட் அங்கத்துவம், சிறுபான்மையோருக்கு வாக்குப்பலம், மந்திரிசபை அரசாங்கம் ஆகிய முக்கிய அம்சங்கள் அடங்கியிருந்தன.புதிய அரசியல் திட்டம் இலங்கைச் சட்டசபையிலேயே அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதும், அது 1944-ம் ஆண்டின் இலங்கை (அரசியல சட்ட) விதிமுறை எனப் பிரகடனப் படுத்தப்படவேண்டும் என்பதும் எங்கள் விருப்பமாகும். இலங்கை அரசாங்க வர்த்தமானியில் (கசெட்டில்) வேணுமென்றே இதன் முழு விபரங்களும் முன்னடியே பிரசுரம் செய்விக்கப்பட்டன. சோல்பரி கமிஷன் நியமனம், அதன் விசாரணை மத்தியஸ்த எல்லை வரையறை விபரங்கள் என்பவற்றைப் பகிரங்கமாய் உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கு நாலு நாட்களுக்கு முன்பாகவே இந்தப் பிரசுரம்செய்விக்கப்பட்டது. மந்திரிமார் விபரக் குறிப்பு விமர்சனம் பல ஆலோசகரின் உதவியோடு ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டதாகவும், ஒலிவர் குணத்திலக்காவுடனும். டி. எஸ். சேனநாயக்காவுடனும் அந்தரங்கமாகக் கலந்தாலோசனை செய்து அவர்களின் சம்மத அனுசரணையோடுதான் அந்த விபரக் குறிப்பு விமர்சனம் உருவாக்கப்பட்டதென்றும் நான் அறிந்தேன்.

## நகல் பிரதி

டி. எஸ். அந்த விபரக் குறிப்பு விமரிசனத்தின் இரகசிய நகல் பிரதியொன்றை என்னிடம் தந்தார். அதிலுள்ள சரி பிழைகளை அலசி ஆராய்ந்து எனது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி வேண்டினர். அந்த இரகசிய நகல் பிரதியில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சொந்தக் கையெழுத்தில் அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புகளும் அபிப்பிராயங்களும் எழுதப்பட்டிருந்தன. அருணாசலம் மகாதேவா அந்தத் திட்டத்தில் அங்கத்துவம் சம்பந்தமான ஒரு அம்சம் தவிர்ந்த ஏனையவற்றையெல்லாம் ஒப்புக்கொண்டிருந்தார். அங்கத்துவம் சம்பந்தமாக அருணாசலம் மகாதேவா ஏற்றுக் கொள்ளாமைக்கோர் காரணமுண்டு. தமிழினத்தின் பொது நன்மைக்கு அந்த முறையான அங்கத்துவம் உகந்ததோ என்று அவர் திடமாகத் தீர்மானம் செய்ய முடியாத நிலையிலிருந்தார். முடிவில் சோல்பரி கொமிஷன் வந்து விசாரணை நடத்திப் போனபின் இந்த நகல் அரசியல் திட்டம் ஒரு சில மாற்றங்களோடு சிபார்சு செய்யப் பட்டது. அந்த மாற்றங்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கவில்லை. அதுவே சோல்பரி அரசியல் திட்டத்தின் அடி அத்திபாரமாக அமைந்தது. ஒரு சிங்களப் பிரதிநிதி தவிர, சோல்பரி அரசியல் திட்டம் முழுவதையும் இலங்கைச் சட்டசபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. ஒலிவர் குணத்திலக்கா இச் செய்தியைத் தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களோடு சேர்த்து இங்கிலாந்தில் சோல்பரிப் பிரபுவுக்கு கேபிள் மூலம் உடனே அறிவித்தார்.

## ஒலிவரின் பங்கு

அடுத்தபடியாக அரசியல் திட்டத்தை அதிகார பூர்வப்படி அங்கீகாரம் செய்வதும், அமுல் நடத்துவதும் பிரதானமானதாயிருந்தது. ஒலிவர் குணத்திலககா ஒருபொழுதும் இலங்கை பார்லிமெண்ட் தேர்தலுக்குப் போட்டியிட முன்வரவில்லை. 1947ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போதும் அதன் பின்னரும் முக்கியமாக டி. எஸ். சேனநாயக்காவுடன் பரிபூரணமாக ஒத்துழைத்து, மந்திரி சபை அமைப்பு, ஆட்சிப் பொறுப்பு, அரசாங்க நிர்வாகம் ஆகிய பிரதான காரியங்களைக் கொண்டு நடத்துவதில் ஒலிவர் குணத்திலக்கா பெரும் பங்கினை எடுத்துக் கொண்டார். சோல்பரி அரசியல் திட்டம் "இலங்கைககுப் பரிபூரண அரசியல் அதிகாரத்தை வழங்கவுமில்லை, ஆட்சிப் பொறுப்பை எம்மிடம் முழுமையும் ஒப்படைக்கவுமில்லை" என்னும் இந்த உண்மையை, இலங்கையில் இன்னும் அதிகமானோர் அறிந்து கொள்ளவில்லை. எனவே, அதி முக்கிய வேலையாக, முதலாவது மந்திரிசபையைத் தோற்றுவித்தபோது சோல்பரி அரசியல் திட்டத்தின் அரை குறை அதிகார ஆட்சி மகுடியை நீக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாதவொன்ருக இருந்தது. பரிபூரண சுதந்திர ஆட்சிப் பொறுப்பை அடையும் நடவடிக்கைகள் அத்தனையையும் இயன்றவரைநேரகாலத்தோடு எடுக்க வேண்டியதும் தடுக்க வொண்ணாத சமயோசிதமாக இருந்தது.

## தூது வந்தனர்

ஒலிவர் குணத்திலக்காவும் லயனல் கொத்தலாவலையும் தான் டி. எஸ். சேனநாயக்காவின் பிரதான இரகசியத்தூதுவர்களாய் இருந்து என்னிடம் தூது வரத் தொடங்கினர்கள். என்னை எதுவிதமும், அந்த முதலாவது மந்திரி சபைக்குள் சேர்த்துக்கொள்ள முயற்சிகள் பல எடுத்தார்கள். எனது மனைவியைக் கொண்டு என்னை இசையப்பண்ணுவதுதான் புத்தியென்றெண்ணி அவரிடமும் தூண்டுதல் புத்தியுரை புகன்று வந்தனர். நான்சகல காரியங்களையும் முன்வைத்துச் சிந்தித்துப் பார்த்த போது எனதுள்ளத்திலிடம்பெற்றிருந்த இலட்சியம் ஒன்றே ஒன்றுதான்: "நமது தாய் நாட்டின் பூரண சுதந்திரம், சுயநிர்ணய தோரணையில் அமைந்த ஒற்றையாட்சி அரசியல் திட்டத்திற்கு முதன்மையானதும், முக்கியமானதும், அடிப்படையானதுமான விடயம், இலங்கை மக்களின் நல்லெண்ணமும் ஐக்கியமும், ஒற்றுமையும், ஒத்துழைப்பும் ஆகும்."

இலங்கை அரசியல் சுதந்திரம் அடைந்த பெரும் நாடகத்தில் பங்குபற்றிக் களித்தவர்களில் நானும் ஒருவன். ஒலிவர் குணத்திலக்காவின் உழைப்புக்கள் எல்லாம் திரைமறைவில் தான் இருந்தன. அவர் இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதில் எடுத்துக்கொண்ட பங்கு பெரியது. வெளியுலகம் அதை அறியாது. அவ்வளவு சாந்தமாய், சாதகமாய், சாமர்த்தியமாய் தாய் நாட்டின் தனிநீக்கத் தன்னாலான சேவைகளையெல்லாம் செய்த பெருமக்களுள் ஒருவர் ஒலிவர் குணத்திலக்கா.

என்றும் உங்கள் மீது
பட்சம் மிக்க,
அப்பா.

## ராஜாவும் ரோஜாவும்

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் ராஜா என்ற பெயரையுடைய ஓர் அண்ணனும் ரோஜா என்ற பெயரையுடைய ஒரு தங்கையும் வாழ்ந்து வந்தனர். அண்ணன் ராஜா மிகவும் சுறு சுறுப்பானவன். எந்நேரமும் ஏதாவது விஷமச்செயலில் ஈடுபட்டிருப்பான். அவனுக்கு உயிர்ப் பிராணிகளை வதைப்பதென்றால் மிகவும் பிரியம். ரோஜா, ராஜாவுக்கு எதிர் மாறு. படுசோம்பேறி. எந்நேரமும் சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதென்றால் அவளுக்குஅளாதிப் பிரியம். இப்படியாக இருவரும் தங்கள் வாழ்க்கையைக் கழித்து மரணமடைந்தனர்.

இவர்கள் இறந்ததும் யமராஜன் இவர்களது உயிரை இறைவன் முன் கொண்டுபோய் நிறுத்தினன். ராஜாவுக்கு மறு பிறவி கொடுப்பதற்காக இறைவன் அவனது கடந்த கால வாழ்க்கையை ஆராய்ந்தான். சென்ற பிறப்பில் ராஜா அதிக சுறு சுறுப்பாக வாழ்ந்திருந்தாலும் அளவுக்கதிகமான உயிர்களை வதைத்திருந்தமையால் அவனை எறும்பு வடிவாக்கி மண்ணில் சுறு சுறப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குவாய் எனக் கூறினர். அவ்வாறே ராஜா பூவுலகில் எறும்பு வடிவுடன் வந்து பிறந்தான். அடுத்து ரோஜாவின் சென்ற கால வாழ்க்கையை கடவுள் ஆராய்ந்தார். அவள் உண்பதும் உறங்குவதுமாய்த் தன் காலத்தைக் கழித்திருப்பதைக் கண்ட இறைவன், அவளை மூட்டைப் பூச்சி வடிவமாக்கி மண்ணில் பிறந்து சோம்பற்றன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கு என அருளினர். அவ்வாறே ரோஜாவும் மூட்டைப் பூச்சியாகப்பூலோகத்தில் பிறந்தாள். இன்று நம் கண்முன் சுறு சுறுப்புடன் ஓடித்திரியும் எறும்புகளும் மறைந்திருந்து உதிரம் உறிஞ்சி வாழும் மூட்டைப் பூச்சிகளும் ராஜா, ரோஜாப் பரம்பரையினரே.

மா. இந்திராணி,
ஆனைக்கோட்டை.

---

### குஞ்சுகளை பராமரித்தல்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வது அழுகிய வீட்டுக் கழிவுகளை உணவாகக் கொடுக்கக் கூடாது.

நாள் முழுமையும் நல்ல தண்ணீரை கோழிகள் குடிப்பதற்கு வசதியாருயித்தல் வேண்டும். சிப்பியோடு, நண்டோடு, கடற்சிப்பி ஆகியன வற்றைப் பொடியாக்கி, கோழிகளுக்கு அளித்தல் வேண்டும். கோழிமுட்டை ஓடுகளைத் தோற்நமற பொடியாக்கியளிக்காவிட்டால் முட்டைகளையுண்ணும் பழக்கத்தை ஓட்டை உண்பதால் பழகிக் கொள்ளக் கூடும்.

#### நோய் தடுப்பு

சாதாரணமாய்ப் "படுவான்" எனப்படும் 'ரணிக்கட்டு' நோய் கிட்டாவண்ணம் தடுப்பதற்காக மாற்றுப் புகுத்துதல்குஞ்சுகள் 2 மாதப் பருவமடைந்தபின் செய்தல் நலம். விவசாயப் பகுதியினரைக் கொண்டு இலவசமாக மாற்றுப் புகுத்துதலைச் செய்விக்கலாம்.

# சிறுவர் பூங்கா

## வானவெளியில்...

— ச. நேசராணி —

ஒரு நாள் மாலை என்னுடைய பூந்தோட்டத்திலே நான் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஆகாயத்திலிருந்து ஓர் சத்தம் கேட்டது. மேலே பார்த்தேன், என்ன ஆச்சரியம்! ஓர் அழகிய முத்து வாகனத்திலே ஓர் அழகிய பெண், வெண்மையான உடை அணிந்து பாடிக்கொண்டிருந்தாள். வாகனம் மெதுவாகப் பூமிக்கு வந்து கொண்டிருந்தது.

வாகனம் கிட்ட வந்ததும் அப் பெண், "இரஞ்சனி, என்னோடு வருகிருயா" என்று கேட்டாள். அப்போது எனக்கிருந்த மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா? துள்ளிக் குதித்துக்கொண்டு வாகனத்தில் ஏறி விட்டேன். வாகனமும் மெதுவாகப் பறக்கத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் முகிற்கூட்டங்களுக்கு மத்தியில் நாங்கள் பறந்து கொண்டிருந்தோம். நட்சத்திரங்கள் எங்களைச் சுற்றிப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. நிலவின் ஒளி எங்களுக்கு குளிர்ச்சியைத் தந்தது. உள்ளத்திலே எழுந்த மகிழ்ச்சியால் நான் எழுந்து நின்று, கைதட்டத் தொடங்கினேன். வாகனம் பறந்து கொண்டேயிருந்தது. அப்போது அப் பெண், "இரஞ்சனி, கீழே பார்த்தாயா?" என்று கேட்டாள். நான் பார்த்தபோது ஐந்து கண்டங்களையும் ஐந்து சமுத்திரங்களையும் கண்டேன். என்னையே மறந்துவிட்டேன்.

சிறிது நேரத்தில் வாகனம் பூமிக்குக் கிட்ட வந்து விட்டதைக் கண்டேன். அப்போது என்னை இறங்கும் படி அப் பெண் கூறினள். நான் மறுத்தேன். உடனே என்னைத் தூக்கி நிலத்திலே எறிந்து விட்டாள்! 'அம்மா' என்று அலறினேன். அம்மா, 'என்ன மகளே' என்று ஓடிவந்தாள். வாகனத்தையும் காணவில்லை; கனவுத் தேவதையையும் காணவில்லை. மறுபடியும் கண்களை மூடினேன். "அழகிய தேவதையே, என்னை இன்னும் ஒரு முறை மாத்திரம் அழைத்துச் செல்லமாட்டாயா" என்ற ஏக்சத்துடனேயே மீண்டும் நித்திரை செய்தேன். ஆனல் நான் கண்ட கனவு கனவாகவே -மீண்டும் வராத கனவாகவே-இருந்து விட்டது!

---

### வைதேகி தேவாரம்

ஆசிரியர்: (பாடசாலைக்குப் புதிதாகவந்த மாணவனைப் பார்த்து) தம்பி, மாசில் வீணை என்று தொடங்கும் தேவாரத்தைப் பாடியவர் யார்?

மாணவன்: பின்னணிப் பாடகி வைதேகி, சார்.

ஆசிரியர்: .........? ? ! !

அனுப்பியவர்: ராஜா,
மாவிட்டபுரம்.

---

'சிறுவர் பூங்கா'வுக்குக் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதுவோர் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்பவேண்டும். சொந்தக்கற்பனையாக இருப்பதோடு, தெளிவாகவும் எழுதப்படல்வேண்டும்.

'சிறுவர் பூங்கா'
'ஈழநாடு'
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

---

## மணியின் அனுபவம்

—: ஏ. அருள் நாதன் :—

மணி வாலிப வயதை எட்டிப் பிடிக்கும் ஓர் கல்லூரி மாணவன். அன்று ஞாயிற்றுக்கிழமை. சினிமா பார்த்து விட்டு கடைசி பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தான்.

இடை வழியில் பஸ்ஸில் ஏதோ பழுது ஏற்பட்டதால் சிறிது நேரம் சுணங்கும் படியாயிற்று. மணி, தான் இறங்கும் இடம் வந்ததும் பஸ்ஸை நிற்பாட்டி இறங்கினன். அப்பொழுது நேரம பன்னிரண்டு மணியைத் தாண்டியிருந்தது. எங்கும் ஒரே இருள். அவனையறியாமல் அவனுடல் நடுங்கத் தொடங்கியது. அந்த இடத்திலிருந்து அவன் வீடு ஒரு மைல் தூரம் இருக்கும்.

ஒரு பனந் தோப்பையும் சிறு வயல் வெளியையும் தாண்டி விட்டால் வீடு வந்து விடும். அருகிலிருந்த வேலியில் ஒரு தடியை முறித்து எடுத்துக் கொண்டு மெதுவாக நடையைக் கட்டினன். பனந் தோப்பினூடே சென்று கொண்டிருக்கும் அவனை யாரோ பின் தொடர்வது போன்ற பிரமை ஏற்பட்டது. அதனல் அவன் திரும்பிப் பாராமல் நடந்து கொண்டிருந்தான். 'அப்படா, ஒரு வழியாய் பனம் தோப்பைக் கடந்தாய்விட்டது, இனிப் பயமில்லை' என்று நினைத்துக் கொண்டான். இப்போது அவன் வயல் வரம்பினூடே நடந்து கொண்டிருந்தான்.

நடந்து கொண்டிருந்தவன் திடீரென நின்ருன். ஐயோ, அது என்ன? ஒரு கணம் உலகமே இருண்டது போலிருந்தது. அவனுக்குச் சற்று தூரத்திற்கப்பால் வரம்புக்கருகில் ஓர் உருவம் நின்றது. அது ஒரு கையில் தடி வைத்திருந்தது.

இவ்வளவு நேரமும் எதற்காகப் பயந்து பயந்து வந்தானே, அதுவே நின்றிருந்தது! அவன் வீட்டுத் தாத்தா பேயைப்பற்றி தனது பழைய அனுபவங்களைச் சொல்லும் போது, பேய் என்பதெல்லாம் வீண் ஜம்பம், அவரவர்களுடைய மனம் தான் பேய் என்று வதாடியிருக்கிருன் மணி. அதற்காக இன்று அந்தப் பேய் பழிவாங்கப் போகிறதா என்று எண்ணினன். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பேசாமல் வரம்பில் உட்கார்ந்து விட்டான். எவ்வளவு நேரம் அப்படி இருந்தானே தெரியவில்லை. இலேசாக நிமிர்ந்து பார்த்தான்.

அந்த உருவம் அப்படியே நின்றிருந்தது. இன்று உயிருடன் வீட்டுக்குத் திரும்பமுடியாது என்று திடமாக நம்பினன். 'உயிர் போனலும் பரவாயில்லை, கையிலிருக்கும் இத் தடியால் ஒரு தரமாவது அப் பேய்க்கு அடிக்க வேண்டும்' என்ற ஆவலும் கூடவே தோன்றியது, மணிக்கு. அவ்வளவு தான், எங்கிருந்து தான் துணிச்சல் வந்ததோ தெரியவில்லை. திடீரென எழுந்து தடியை ஓங்கிக் கொண்டு அந்த உருவத்தை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான். இப்போது, மணிக்கும் அந்த உருவத்திற்கும் இடையில் மூன்றடி தூரமே இருந்தது. மணி கண்ணை மூடிக்கொண்டு பாய்ந்து அதன் தலையில் ஒரு போடு போட்டான். அடுத்த கணம் 'டபார்' என்ற சப்தத்துடன் தலை வெடித்துச் சிதறியது. தலையில்லாத உருவம் பொத்தென்று கீழே விழுந்தது. கண்மூடித் திறப்பதற்குள் மணி வீட்டிற்கு வந்து விட்டான். உடல் உதறல் அப்போதும் நிற்கவில்லை.

மணி, பேசாமல் தனது அறைக்குச் சென்று, கதவுகளை நன்ருக மூடிவிட்டு, படுத்தான். அந்த உருவம் மட்டும் அவன் கண்களிலிருந்து மறையவில்லை. அவனைப் பார்த்து, தனது கோரப்பற்களைக் காட்டிப் பயங்கரமாகச் சிரித்தவாறே, 'பொடிப்பயலே என்னையா அடித்தாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்!' என்று அவனை நோக்கி வருவது போலிருக்கும். மணி இதை மறப்பதற்காக தான பார்த்த சினிமாவில் வரும் காட்சிகளை ஒவ்வொன்ருக நினைவுபடுத்திக் கொண்டான். அந்த நினைவுக் கூடே நித்திராதேவி அவனை அணைத்துக்கொண்டாள்.

காலையில் எழுந்தவுடன் நேராக வயல் வரம்பைநோக்கி நடக்கலானன். அங்கே அவன் வரம்புக்கருகில் கண்டதென்ன? தலையில்லாத ஒரு கத்தரி வெருளி நிலத்தில் கிடந்தது. அதன் தலையாகவைக்கப்பட்டிருந்த பானை சுக்குநூருக உடைந்து கிடந்தது. 'அட, போயும் போயும் ஒரு கத்தரி வெருளிக்கா பயந்தேன்' என எண்ணியவன், சற்றுதூரத்திற்கப்பால், அத்தோட்டச் சொந்தக்காரன் வருவதைக் கண்டான். அவனைக்கண்ட பிறகும் அவ்விடத்தில் நிற்பதற்கு மணிக்கு என்ன பைத்தியமா? வீட்டை நோக்கி நடந்தான். நடந்து கொண்டிருந்தவன் காதில் தோட்டக்காரனின் திட்டும் ஒலி விழத்தவறவில்லை.

பின்னே என்ன? முதல்நாள் பின்னேரம் வைத்த வெருளியை இரவோடிரவாகச் சின்னபின்னபடுத்தினல் அந்த மனிதனுக்குக் கோபம் வராதா, என்ன?

---

### யார் எழுதியது?

ஆசிரியர்: அடே, கண்ணன்! திருக்குறளை எழுதியவர் யார்?

கண்ணன்: (அரைத்தூக்கத்துடன்) நான் எழுதவில்லை, சார்.

அனுப்பியவர்: கி. இராசா,
ஆவரங்கால்.

---

## 'கிராப்பு'

— த. பத்மநாதன் —

பாலுவின் வீட்டுக்கு நான் எப்பொழுது போனாலும், அவன் கையில் ஒரு சீப்புடனேயே என்னிடம் வருவான். பாலுவுக்குத் தனது சிகையை அலங்கரிப்பதில் ஒரு தனி ஆர்வம். காலையில் பாடசாலைக்குப் போக நேரமானாலும் பரவாயில்லை. சிகை அலங்காரத்துக்கு ஆகக் குறைந்தது பதினைந்து நிமிடங்களாவது அவனுக்கு வேண்டும். சீப்பை லாவகமாகப் பிடித்துக் கொண்டு, உயர்ந்த கண்ணடி முன், உடலை வளைத்து, நெளித்துக் கொண்டு நாடக ஒத்திகை செய்வது போல் காட்சியளிப்பான்.

பாலுவின் அப்பாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. அவன் தலைவாரத் தொடங்கியதும் பாலுவின் அப்பா 'முணு முணு'க்கத் தொடங்கி விடுவார். இருந்தும், அவனுடன் நேரில் இதெல்லாம் பேச மாட்டார். ஏனெனில் பாலு தனது அப்பாவின் உயரத்தைத் தாண்டிவிட்டான்.

பாலுவின் 'கிராப்'பில் யாராவது தொட்டால் போதும், அவனுக்குக் கோபம் பொத்தென்று வந்து விடும். பாலு தன் சிகையோடு படும்பாட்டை அவர்கள் எப்படி அறிவார்கள்? 'கிராப்பு' படிவதற்காக பாலு, எப்பொழுதும் வாசனைத்தைலம் தேய்க்கத் தவறுவதில்லை. பாடசாலை விடுதலை விட்டதும் பாலுவின் அப்பா, பாலுவின் மேல் பிரியம் காட்டுவார் இதென்ன புதுவிதமான அன்பு என்று கேட்கத் தோன்றும் தான். விடுதலை விட்ட அடுத்த தினம் பாலு 'கிராப்பை' கட்டையாக (நோட் குரூப்) வெட்டி விடுவான். ஆனல் பாடசாலை ஆரம்பமாகியதும் அவனது கிராப்பு,' மறுபடியும் 'பழைய கதை' தான்.

---

## கிளியே வாராய்

— முகிலன் —

பச்சைக் கிளியே வாவாவா
பறந்து நீயும் ஓடிவா
இச்சையாக என்னுடனே
என்றும் விளையாட வா!

உச்சிக் கொம்பர் தனைவிட்டு
உடனே நீயும் கீழேவா
பச்சைக் குழந்தை என்னுடனே
பரிந்து பேச விரைந்துவா !

கூட்டில் உன்னை அடைத்திட்டு
கனிகள் பலவும் நான் தருவேன்
வீட்டில் நீயும் என்னுடனே
வசித்தால் எனக்கு மிகவின்பம்!

நாட்டில் வீணய் அலைவதனல்
நன்மை உனக்கு எதுவுண்டு?
வீட்டில் என்னேடின் புடனே
வசிக்கலாமே வருவாயே!

கிளியே கிளியே பறந்து வா
கிளையை விட்டு இறங்கி வா
அழியா அழகுடை அஞ்சுகமே
அன்பாய் உடனே இங்குவா!



உடன் யாழ் குஞ்சுகள்
வைற் லெக்கோன்
சதம் 75மட்டுமே

ஆர். ஐ. ஆர்.
சதம் 90 மட்டுமே

வேறு
பிலமத் றெக் - லைட்சசெக்ஸ்
அதிக முட்டை இடும்
இனங்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

அதிக சக்தி ஊட்டுவதற்கும்
அதிக முட்டை இடுவதற்கும்
தீன் வகைகள்
1 ருத்தல் சதம் 23 மட்டுமே.

ஆலோசனைகள் இலவசம்

யாழ் குஞ்சு—உற்பவகம்

உரிமையாளர் சு. சத்தியலிங்கம்
இல. 3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல கோழிப்பண்ணை
தேவைகளுக்கு
போன்: 7170


## எதிர்க் கட்சியின் முக்கியத்துவம்

### டாக்டர் என். எம். விளக்கம்

எட்டியாந்தோட்டை, சனி

"ஜனநாயகக் கட்சி முறையில் எதிர்க்கட்சி மிக முக்கியமென்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு மந்திரி பெறும் அதே சம்பள விகிதத்துக்கு உரிமை பூண்டவர் என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். அத்துடன் பிரதமருக்கு இரண்டாவதாக அவர் முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றார்."

இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா கிற்றுகல மகா வித்தியாலயத்திற் பேசும் போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"அரசாங்கக் கட்சிக்கு அடுத்த கட்சியாக விளங்குவது எதிர்க் கட்சியே ஆகும். எனவே, ஆட்சிக் கட்சியினரின் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டி வாக்காளர்களுக்கு அறிவு புகட்ட வேண்டியது எதிர்க்கட்சியின் முக்கிய கடமையாகும். எந்த ஒரு விஷயத்திலும் சரியும் தவறும் உள்ளதென்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஆட்சிக் கட்சியின் தவறுகளை அம்பலப்படுத்தி மாற்றுத் திட்டங்களை வகுக்க வேண்டியதும் எதிர்கட்சியின் கடமையாகும்."

## பூஜ்யம் தபால்

நகர பிதாக்கள்
யாழ்ப்பாண
மாநகரசபை.

பெரியோர்களே!
வணக்கம்!

புதிய மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறிகிறேன். இது குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. எனக்கு ஆச்சரியமென்னவென்ருல், புதிய மேயர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட மறுநாளே இத்தீர்மானம் கொண்டுவரப்படாமல் 40 நாள் தவக்கமாகிவிட்டதுதான். இவ்விதம் வீணைக் காலதாமதம் செய்ததற்கு நீங்கள் கூறும் விளக்கத்தை அறிய பொதுமக்கள் ஆவலுடனும் கவலையுடனும் காத்திருக்கிறார்கள்.

மேயர் பதவி காலம் 3 வருடத்துக்கு நீடிக்காமல் ஒரு வருடமாக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. சென்னையிலும் இப்படித்தானுள்ளது. அதிகமானவர்கள் இப்பதவி வகிக்க அந்த ஏற்பாடு உதவலாமென்று. ஒரு நாளைக்கு ஒரு மேயர் என்று சட்டம் செய்துவிட்டால், பலருக்கும் சான்ஸ் கிடைக்கவும் பிறருக்கு வழிகாட்டவும் முன்னேற்றமாகவுமிருக்குமல்லவா?

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

ஒரு சிறிய யாழ்ப்பாண மாநகரசபையை ஒற்றுமையுடன் நடத்தமுடியாதவர்கள், எப்படி அதிக அரசியல் உரிமைகளைப் பெற்று, நிறைவேற்ற முடியுமென்று ஓர் அன்பர் கேட்கிறார். அவருக்கு என்ன பதில் சொல்ல.

"பூ"

## கவர்னர் தமிழில் பேசாவிட்டால் மறியல்!

மதுராந்தகம், ஏப்ரல் 7

செங்கற்பட்டு மாவட்ட சோஷலிஸ்ட் கட்சி கவுன்சில் கூட்டம் காஞ்சி வாசுதேவன் தலைமையில் கூடியது. கூட்டத்தில் தமிழக செயலாளர் திரு. காளியப்பன், கவிஞர் கம்பதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அண்மையில் நடைபெறவிருக்கும் சட்டமன்ற கூட்டத்தில் கவர்னர் தமது தாய்மொழி அல்லது தமிழகத்தின் ஆட்சி மொழியாம் தமிழில் மட்டுமே உரை நிகழ்த்துமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. கவர்னர் தேசிய உணர்வோடு இக்கோரிக்கையை ஏற்க மறுத்தால், சட்ட மன்றத்தில் நல்லசிவம் எம். எல். ஏ. கவர்னரின் ஆங்கில உரையை எதிர்த்து மறியல் செய்வார் என்றும் கவுன்சில் எச்சரித்தது.

## சமய தீட்சை

கரம்பன், சனி

கரம்பன் மேற்கு முருகன் ஆலயத்தில் (9-4-62) திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் கரம்பன் சைவமகாசபையின் ஆதரவில் இலவச சமய தீட்சை நடைபெறும்.


மலிவு விற்பனை

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு பல ரகப் பிடவைகளின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ. அப்பையா அன் கோ.
82, கே. கே. எஸ். ரோட்,
கிளை: 54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: ஆ. அப்பையா
செ. காசிப்பிள்ளை


## மத்திய மந்திரிசபை பட்டியல்

### திங்கள் வெளிவரும்

சென்னை, சனி

தமிழ்நாடு சட்டசபையின் முன்னாள் நிதியமைச்சரும், தற்போது லோகசபை அங்கத்தவருமான திரு. சி. சுப்பிரமணியம் இன்று புதுடில்லியிருந்து சென்னைக்குத் திரும்பினர்.

இந்திய மத்திய மந்திரிசபையின் பட்டியல் இன்று அல்லது திங்கட் கிழமை வெளிவருமென திரு. சுப்பிரமணயம் இன்று சென்னையில் தெரிவித்தார்.

## ஆஸ்பத்திரியில் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரைந்துவந்தனர். பொலிசாரும் அழைக்கப் பட்டார்கள். ஆனல் தீயணைப்புக்கான சாதனவசதியெதுவும் இல்லாமற் போனதால் தீயைஉடனடியாக அணைக்கமுடியாதுபோய் விட்டது.

தீயை அணைப்பதற்காகத் துணிச்சலுடன் மேலேறிச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்களான சோமஸ்ரீ, ஜயசிங்கா ஆகிய இருவரும் எரிகாயங்களுக்குள்ளானர்கள்.

இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பிரதம பொலிஸ்இன்ஸ்பெக்டர் மார்சோ புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

## 20 வருட ஆசிரிய சேவை

### கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உப அதிபராகக் கடமையாற்றி வரும் திரு.க. தெய்வானந்தம் பிள்ளை எம். ஏ. தமது ஆசிரிய சேவையில் 20 வருடத்தைப் பூர்த்தியாக்கியுள்ளார். இவரைக் கௌரவிக்கும் பொருட்டு பல பகுதிகளிலும் அவருக்கு வரவேற்புபசாரங்கள் நடத்த ஒழுங்குசெய்து வருகின்றனர். யாழ்மத்திய கல்லூரி விடுதிச் சாலைப்பழைய மாணவர் இயக்கமும் ஓர் வரவேற்பு வைத்து அவரைக் கௌரவிக்க இருக்கிறது. திரு. க. தெய்வானந்தம்பிள்ளை பிரஸ்தாப விடுதியின் வாடனாக இருக்கிறார்.

## அன்னதானம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குதீவு-மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவிலில், சென்ற வெள்ளிக்கிழமை 'அன்னதானம்' வழங்கப்பட்டது.

கோவிலுக்கு அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக பந்தலில் நடைபெற்ற இவ்வன்னதான வைபவத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

## 1962-ம் ஆண்டின் வடமாகாணத்தின் சிறந்த கிரிக்கெட் வீரர் யார்?

### "விக்னராஜா" பரிசுக் கிண்ணத்திற்காக 'ஈழநாடு' நடத்தும் தெரிவு

1962-ம் ஆண்டில் வடமாகாணத்திலுள்ள கல்லூரிகளுக்கிடையே நடந்த கிரிக்கெட் போட்டி ஆட்டங்களில் மிகச்சிறந்த முறையில் விளையாடி கிரிக்கெட் அபிமானிகளின் மனதைக் கவர்ந்த கிரிக்கெட் வீரர் யார்?

'ஈழநாடு' வாசகர்களும், கிரிக்கெட் ரசிகர்களுமான உங்களிடமிருந்தே இக்கேள்விக்கான விடையை எதிர்பார்க்கிறோம். இலங்கையின் தலைசிறந்த கிரிக்கெட் அபிமானிகளில் ஒருவரான டாக்டர் ஜி. விக்னராஜா தந்துதவியிருக்கும் வெற்றிக்கிண்ணம் 'ஈழநாடு' வாசகர்களால் தெரிவுசெய்யப்படும் கிரிக்கெட் வீரருக்கு விசேஷ பரிசளிப்பு விழாவின்போது வழங்கப்படும்.

'ஈழநாடு' பத்திரிகையில் இத்தெரிவுக்கான "கூப்பன்கள்" தொடர்ந்து வெளிவரும்.

உங்கள் அபிமான கிரிக்கெட் ஆட்டக்காரர், இக்கௌரவத்தைப் பெறவேண்டுமானல் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும் "கிரிக்கெட் வீரர் தெரிவுக்"க் கூப்பன்களைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டும். இக் கூப்பன்கள் நாளையிலிருந்து எமது பத்திரிகையில் வெளியாகும்.


புகழ் மணக்கும் சித்திரைப் புத்தாண்டின் விருந்து!
மக்கள் கண்குளிர இதயம் மகிழ வருகிறது!!
சினிமாஸ் திரைகளில்
இலட்சியம்! தியாகம்!! ஏக்கம்!!!
மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான
இலக்கியப் படைப்பு!



சிவாஜி கணேசன்
பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
வி. நாகையா — டி. எஸ். பாலையா
மனோரமா — கருணாநிதி
ஆகியோர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
பாலும் பழமும்
சங்கீதம் — விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன் — ஏ. பீம்சிங்

3-வது வாரம்!
கிங்ஸ்லி
(கொழும்பு)
சித்திரா — அசாத் நடித்த
ஜிம்போ
(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மாலை 6-30 இரவு 9-30-க்கு
எம். ஆர். ராதா — சௌகார்ஜானகி நடித்த
உலகம் சிரிக்கிறது

மனோகரா
(யாழ்ப்பாணம்)
மாலை 6-30 இரவு 9-30 க்கு
பிரேம் நஸிர், எப். என். ராஜம் நடித்த
இருமனம் கலந்தால் திருமணம்



கோழிக் குஞ்சுகள்
60 சதம்
உயர்தர ஒரு நாள் வெள்ளை லெக்கோன்
கோழிக் குஞ்சுகள்.

70 சதம்
மற்றைய சாதிகள்

முன் கூட்டிய ஆடர்களை முற்பணம் 50 வீதம் கட்டி
பதிவு செய்து கொள்ளலாம்.

முட்டை அடைவைக்கும் விபரங்கள்
1-ம் 100க்கு 15 சத விகிதம்
2-ம் 100க்கு 14 சத விகிதம்
3-ம் 100க்கு 13 சத விகிதம்

தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும்
கூளாவடி, ஆனைக்கோட்டை.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது